# முத்தமிழ் விழா - 1994




**கலாசாரப் பேரவை**

மண்முனை வடக்கு பிரதேச செயலகம், மட்டக்களப்பு.

# முத்தமிழ் விழா

# சிறப்பு மலர்

மண்ணில் எம் கலைகளைக்
கண்ணென மதிப்போம்.

வெளியீடு :

**கலாசாரப் பேரவை**
**பிரதேச செயலகம்**
**மண்முனை வடக்கு,**
**மட்டக்களப்பு.**

# மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை உறுப்பினர்கள் 1994

**தலைவர்:**

திரு. அ. கி. பத்மநாதன் (பிரதேச செயலாளர்)

**இணைச் செயலாளர்கள்:**

செல்வி கலாமதி பாலசிங்கம் (உதவி பிரதேச செயலாளர்)

திருமதி வாசுகி அருள்ராஜ் (உதவி பிரதேச செயலாளர்)

**விடய லிகிதர்:**

செல்வி மதிவதனி ஆறுமுகம்.

## உறுப்பினர்கள்

| | |
|---|---|
| இலக்கியப் பிரிவு: | திரு. செ. குணரெத்தினம்<br>செல்வி கபீபா இஸ்மாயில்<br>திரு. க. யோகநாதன்<br>திரு. ஐ. நடேசன் |
| தொல் விவகாரம் : | திரு. அன்பழகன் குரூஸ்<br>திரு. கதிர் பாரதிதாசன் |
| அரும்பொருள் : | திரு. எஸ். தங்கவேல<br>திரு. த. சிவலிங்கம் |
| சுவடிகள் : | திரு. செழியன் ஜே. பேரின்பநாயகம்<br>திரு. அ. அந்தோனிமுத்து |
| கலைத்துறை : | திரு. அ. இருதயநாதன்<br>திரு. வே. இராசமாணிக்கம்<br>திரு. மாஸ்டர் சிவலிங்கம்<br>திரு. எம். ராசரெத்தினம் |

## முத்தமிழ் விழா சிறப்பு மலர் குழு

1. திரு. எஸ். தங்கவேல் (திமிலை மகாலிங்கம்)
2. கவிஞர் செ. குணரெத்தினம்
3. நெல்லை நடேஸ்.

## கல்லடி - உப்போடை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன்
## சுவாமி ஜீவனானந்த அவர்களின்

# ஆசிச்செய்தி

### கலை தெய்வீகமானது

மனிதனை மிருகங்களிடமிருந்து வேறுபடுத்துவது கலை. மனிதனில் மிருக உணர்வை அகற்றி மனித உணர்வை வளர்ப்பது கலை. அதைத் தெய்வீக உணர்வாகப் பரிணமிக்கச் செய்வது கலை. புகழ்பெற்ற கலைஞர்களின் வாழ்க்கையை ஆழ்ந்து நோக்கினால் ஆத்மீகமே அவர்கள் வாழ்க்கையின் அடிநாதமாக செயற்பட்டதை உணர்ந்துகொள்ளலாம். கவின்கலைகள், இலக்கியம், நாடகம் முதலிய துறைகளில் ஈடுபடுவோர் மென்மையான உணர்வுகளைக் கொண்டவர்கள். அதனால் மனிதாபிமானம் மிக்கவர்களாக அவர்கள் செயற்படுகிறார்கள். கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் சகலருமே இதில் அடங்குவர்.

இன்னும் சொல்லப்போனால் பிற்காலத்தில் ஆத்மீகவாதிகளாக ஞானிகளாக வாழ்ந்தவர்கள்கூட தமது இளமைப்பருவத்தில் இசை, நாடகம், சிற்பம், ஓவியம் போன்ற கலைகளில் ஈடுபாடு உள்ளவர்களாகவே வாழ்ந்திருக்கின்றனர். பகவான் ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் போன்றோர் தமது இளமைப் பருவத்தில் இத்துறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்ததை நாம் அறிவோம்.

எனவே கலையுணர்வு ஆத்மீக உணர்வுக்கு அண்மையில் இருப்பதை நாம் அறிந்துகொள்ளலாம். கலையுணர்வுக்கு அடுத்தபடி ஆத்மீக உணர்வு என்பதும், கலையுணர்வே பரிணாமவளர்ச்சி அடைந்து ஆத்மீக உணர்வாக மாறுகிறது என்பதும் மறுக்கமுடியாத உண்மைகள்.

உண்மைக் கலைஞர்கள் என்றுமே நம் போற்றுதலுக்குரியவர்கள்.

இவ்வகையில் கலை வளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் நமது மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை நடாத்தும் கலாசார விழா பூரணத்துவம் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். இக்கலாசாரப் பேரவை, மண்முனை வடக்குப் பிரதேசம் மட்டுமல்லாது இந்த மாவட்டத்தில் உள்ள கலைஞர்களையும், கலை முயற்சிகளையும் ஊக்குவிக்கும் உந்து சக்தியாக விளங்கும் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

இராமகிருஷ்ணபுரம்,
மட்டக்களப்பு.
*2-3-94.*

சுவாமி ஜீவனானந்த.

நம்பிக்கை, நாணயம், தரமான வேலைப்பாடுகளுடைய

**நவநாகரீக தங்க நகைகளுக்கு**

நாடுங்கள்



# சங்கீதா ஜுவலரி

**இல. 17/1, முனை வீதி,**

**மட்டக்களப்பு.**

தொலைபேசி: 065 - 2196.

புத்தம் புதிய டிசைன்களில்

**22 கரட் தங்க நகைகள்**

நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ள



# சொர்ணமஹால் ஜுவலர்ஸ்

**இல. 27, முனை வீதி,**

**மட்டக்களப்பு.**

தொலைபேசி: 065 - 2069.



## திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்

# அதிவண. ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

அவர்களின்

# ஆசிச்செய்தி

மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை நடாத்தவிருக்கும் கலாசார விழா தொடர்பாக சிறப்பிதழ் வெளியிடுவது அறிந்து மிகவும் மகிழ்கின்றேன்.

ஓர் இனத்தின் தொன்மையையும், நாகரீகச் சிறப்பையும் வெளிப்படுத்துவது அவ்வினத்தின் கலை, கலாசார வெளிப்பாடுகளே.

நீண்டகாலப் பெருமைவாய்ந்த மட்டக்களப்புப் பிரதேசத்தின் கலாசாரச் சிறப்புக்கள் தொடர்ந்து பேணப்பட்டு வளர்க்க எடுக்கப்படும் முயற்சிகளைப் பெரிதும் வரவேற்கின்றேன். கலை, கலாசார நிகழ்வுகள், பொழுதுபோக்காக மட்டுமன்றி குழுமச் செயற்பாட்டையும், மனிதர்களுக்கிடையே அன்பையும், நட்பையும், சமாதானத்தையும் கட்டி எழுப்புவதற்குத் துணைபுரிகின்றன.

மனித வாழ்வின் அழகை வெளிப்படுத்துவதில், உயர்ந்த மதிப்பீடுகளை உருவாக்குவதில் இப்பேர்ப்பட்ட கலாசார விழாக்கள் பெரும் பங்காற்றுகின்றன என்பது எனது நம்பிக்கை. இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டுழைக்கின்ற அனைவரையும் பாராட்டுகின்றேன். கலாசார விழா இனிது நடைபெறவும், சிறப்பு மலர் சிறப்புற அமையவும் வாழ்த்துவதோடு எல்லாம்வல்ல இறைவனின் ஆசீர் நிறைய இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம்,

✠ ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை
திருமலை – மட்டுநகர் ஆயர்.

ஆயர் இல்லம்,
மட்டக்களப்பு.

WITH BEST COMPLIMENTS

FROM

# A. V. S. & COMPANY (Pvt.) LTD.

42, Lake Road No. 2,
BATTICALOA.

DISTRIBUTORS OF

PRIMA POULTRY FOOD,

ANGLO ASIAN CHEMICALS AND FERTILIZER,

L. P. GAS CYLINDERS (GAS COMPANY),

"HALO BULBS" AND DAINTEE FRUIT JELLIES

AND

TELEPHONE COMMUNICATION
WITH FAX SERVICES.

TELEPHONE No: **2643 & 4358.**

FAX: **065 - 2743**

### மட்டக்களப்பு ஜாமிஉஸ்ஸலாம் ஜும்ஆப் பள்ளிவாயல் கதீப்

# மௌலவி Z. A. ஹகீமுல் அமீன்

### அவர்களின்

# ஆசிச்செய்தி

மண்முனை வடக்குப் பிரதேச கலாசாரப் பேரவை நடாத்தும் இவ்வருடத்திற்கான கலாசார விழா தொடர்பாக வெளியிடும் சிறப்பு மலருக்கு எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

எமது மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களும், முஸ்லிம்களும் மொழியாலும், பிற கலாசாரப் பிணைப்புக்களாலும் ஒன்றுபட்டு பன்னெடுங்காலமாக இணைந்து வாழும் இரு சமூகங்கள் தம்மை மேலும் இறுக்கமாக இணைத்துவைப்பதற்குக் கலைகளும் ஓர் ஊடகமாக அமைந்துள்ளன.


மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை தமது இரு சமூகங்களையும் ஒன்றாகப் பிணைத்துத் தாய்மொழியாம் தமிழ் மொழியையும், கலாசாரத்தையும் பேணுவதில் ஆர்வம் காட்டுவது மகிழ்ச்சிதரும் விடயமாகும். இம்முயற்சியானது எமக்கிடையில் மேலும் நெருக்கத்தையும், சகோதர வாஞ்சையையும் உருவாக்கும் என்பது எனது துணிபாகும்.

இந்தப் பெருவிழாவும், அதனைத் தொடர்ந்துவரும் அனைத்து முயற்சிகளும் வெற்றிபெற நல்லாசிகளை வழங்குகிறேன்.

நன்றி.

**மௌலவி Z. A. ஹகீமுல் அமீன்**
மட்டக்களப்பு ஜாமிஉஸ்ஸலாம்
ஜும்ஆப் பள்ளிவாயல் கதீப்.

அழகிற் சிறந்த பவுண் தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்



★ நம்பிக்கை
★ நாணயம்
★ நேர்மை

இன்றே விஜயம் செய்யுங்கள்

# ஆர்த்தி ஜுவலர்ஸ்

இல. 22, மெயின் வீதி,
மட்டக்களப்பு.

தொலைபேசி இல : 065 - 2305.



# ஜேசு ரவல்ஸ் (JESU TRAVELS)

மட்டக்களப்பு - கொழும்பு
காலை, மாலை, இரவு பஸ் சேவை

★ கட்டணம் ரூபா 80/- மட்டுமே ★

*மட்டக்களப்பில்*
*ஆசனங்களைப் பதிவுசெய்ய,*

## தயா மோட்டஸ்

276 A, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

☎ 065 - 2030, 065 - 2156.

*கொழும்பில்*
*ஆசனங்களைப் பதிவுசெய்ய,*

## HOTEL SOUTH ASIA

8, கீர்த்தி ஒழுங்கை,
105, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு—11.

☎ 01 - 423312.

## வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர்
## லயனல் பெர்னாண்டோ
### அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பிலே கொண்டாடப்படும் *1994*ம் ஆண்டுக் கலைவிழாவிலே பிரதம அதிதியாகக் கலந்துகொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இம்மாவட்டம் பல கலைகள் பிறந்து, வளர்க்கப்பட்ட கலாநிலையம் என்பதினை நான் நன்கறிவேன். பண்டைக்கால வடமோடி, தென்மோடி நாட்டுக்கூத்துக்கள், நாடோடி நாடகங்கள், உங்கள் பகுதிக்கே தனித்துவமான கரகாட்டங்கள், நடனங்கள், குரவை ஒலிகள் முதலானவற்றின் பெருமையையும், சிறப்பையும் பற்றியும் நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். எனது குடும்பம் ஒரு கலைக் குடும்பம். ஆகவே எனக்குக் கலைகளில் பெரும் ஆர்வமும், நாட்டமும் உண்டு. கலை கலாச்சாரத் துறைகளில் மட்டுமன்றி இலக்கியம், கவிதை, புராணம் முதலான துறைகளில் பாண்டித்தியம் பெற்ற பல பண்டிதர்களையும் இம்மாவட்டம் தோற்றுவித்திருக்கின்றது என்பதனையிட்டு எனக்கு மட்டில்லா மகிழ்ச்சி. ஆகவே இந்தப் பெரும் கலைவிழா எடுக்கப்படுவது சாலப்பொருந்தும். நீங்கள் எடுக்கும் இப்பெருவிழா வெற்றியடைய வேண்டும் என வாழ்த்துவதுடன், இப்பகுதிப் பாரம்பரிய கலைகளுக்கு இது போன்ற விழாக்கள் புத்துயிர் ஊட்டுமென்பதில் எனக்கு எவ்வித ஐயமுமில்லை.

**லயனல் பெர்னாண்டோ**
ஆளுநர்,
வடக்கு – கிழக்கு மாகாணம்.

*மண்முனை வடக்கு கலாசாரப் பேரவையினால் நடாத்தப்படும் முத்தமிழ் விழா சிறப்புற அமைய, பனை அபிவிருத்திச்சபை தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.*

மட்டுநகரின் இயற்கைச் செல்வமாகிய பனை வளத்தை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வாங்குவதன்மூலம் பனை வளத்தின் பயன்பாட்டைப் பெருக்குவோம். அதனூடாக ஏழைக் குடும்பங்களுக்கு வாழ்வளிப்போம்.

*தரமான பனை உற்பத்திகள் கிடைக்குமிடம் :*

# கற்பகம்

**சந்தைச் சதுக்கம்,**
**மட்டக்களப்பு.**

**பனை அபிவிருத்திச்சபை,**
மட்டக்களப்பு.
தொலைபேசி இல: 2433.

---

▷ உங்கள் தேவைக்கேற்ற விதத்தில் தரமான அரிசியினைக் கொள்வனவு செய்யவும்,
▷ விளைந்த நெல்லை நியாயமான விலைக்கு விற்பனைசெய்யவும்,
▷ விவசாயிகளுக்குத் தேவையான தரம்மிக்க பசளைகளையும், கிருமிநாசினிகளையும் பெற்றுக்கொள்ளவும்

**மட்டுநகரில் நம்பிக்கையான ஸ்தாபனம்...**

# JEGATHEES RICE MILL

## ஜெகதீஸ் றைஸ் மில்

**எல்லை வீதி — முகத்துவாரம்,**
**மட்டக்களப்பு.**
065 - 2631

*கிளைகள்:*

**Myruban Agro Centre,**
Valayaravu,
Batticaloa.

**Jegathees Rice Centre,**
49/1, Pansala Road,
Batticaloa.

## வடக்கு - கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளர்
## திரு. சொ. கணேசநாதன் அவர்களின்

# ஆசிச்செய்தி

### கலையின் பங்களிப்பு

உலக வரலாற்றில் நாகரிக வளர்ச்சியின் குறியீடாகக் கலை, கலாசாரம் அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். பழம்பெரும் நாகரிகங்களான எகிப்திய நாகரிகம், பபிலோனிய நாகரிகம், அசுரேனிய நாகரிகம், எபிரேய நாகரிகம், கிரேக்க நாகரிகம் முதலியவற்றுள், திராவிட நாகரிகமே காலத்தால் முந்தியதாகவும், காலத்தால் அழியாததாகவும் வளர்ச்சியை உள்ளடக்கியதாகவும் சிறந்திருப்பதை மானிடவியல் (Anthropology) ஆய்வாளர் பலர் நிறுவியுள்ளனர். அந்நாகரிக வளர்ச்சி, ஒரு சிறிய அளவிலேனும், இன்றுவரை தொடர்வது பெருமைக்குரிய விடயமாகும்.

மொஹஞ்சதரோ, ஹரப்பா இடிபாடுகள் தமிழர்களின் நகர அமைப்பின் சிறப்பையும், கட்டிடக்கலை வளர்ச்சியையும் எடுத்துக்கூறுகின்றன. கி.மு. 4440ம் ஆண்டு முதல் இயங்கியதாகக் கூறப்படும் தமிழ்ச்சங்கங்கள், தமிழரின் இலக்கியச் செழுமையைப் பறைசாற்றுகின்றன. பல்லவர் காலச் சிற்பங்களும், சோழர் கால ஆலயங்களும், தமிழரின் சிற்பத்திறனை நிலை நிறுத்துகின்றன. இவ்வாறே தமிழரின் நாடகம் (கூத்து), நடனம், ஓவியம் முதலிய அழகியற் கலைகள் புகழ் பெற்று விளங்குகின்றன.

ஆண்டுதோறும் கலை, கலாசார விழாக்கள் நடைபெறும் சமயத்தில் இச் சிந்தனைகள் எழுவது தவிர்க்கமுடியாதது. இச்சிறப்புக்களை எண்ணிப் பார்ப்பதும் பயனுள்ளது.

இந்த வகையில் மட்டக்களப்பு, மண்முனை வடக்கு செயலகம் ஆண்டுதோறும் கலை விழாக்களை நடாத்திக் கலைஞர்களைக் கௌரவிக்கவும், கலைகளை ஊக்குவிக்கவும் திட்டமிட்டுச் செயற்படுவது பாராட்டுக்குரியது. இவ்விழா தொடர்பாக வெளிவரும் நினைவு மலர் இந்நிகழ்வுகளின் வரலாற்றுப் பதிவாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இம்முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் பாராட்டுகின்றேன். உங்கள் கலைப்பணிகள் வெற்றிகரமாக நிறைவேறவும், அவை நமது சந்ததியினருக்கு உந்துசக்தியாக அமையவும் வாழ்த்துகின்றேன்.

**சொ. கணேசநாதன்**
பிரதம செயலாளர்.

பிரதம செயலாளர் செயலகம்,
வடக்கு - கிழக்கு மாகாணசபை,
திருகோணமலை.
*04-03-1994.*

கட்டிடத்துக்குத் தேவையான

★ இரும்புச் சாமான்கள்

★ தண்ணீர் பம்புகள்

★ சகலவிதமான வண்ணங்கள்

ஆகியவை

நியாய விலையில் கிடைக்குமிடம்

ஈஸ்டன் ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்

5, இரண்டாம் குறுக்குத் தெரு,

மட்டக்களப்பு.

☎ 065 - 2322, 065 - 2135.

சகலவிதமான கட்டிடப் பொருட்களையும்

நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள

நீங்கள் நாடவேண்டிய இடம்

முகபத் ஹாட்வெயர்ஸ்

இல. 130, மெயின் வீதி,


மட்டக்களப்பு.

☎ 065 - 2578.

குறித்த தவணையில் நவநாகரீக டிசைன்களில்

தரமான தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள

இன்றே நாடுங்கள்



# கௌரி நகை மாளிகை

15, முனை வீதி, மட்டக்களப்பு.

தொலைபேசி : 065 - 2838.

---

உயர்தர ஜவுளி வகைகளுக்கு

மட்டுநகரில்

சிறந்த இரண்டு ஸ்தாபனங்கள்

## மர்ழியாஸ்

இல. 12, மெயின் வீதி,
மட்டக்களப்பு.

தொலைபேசி: 2990.

## நியூ மர்ழியாஸ்

இல. 44, மெயின் வீதி,
மட்டக்களப்பு.

தொலைபேசி : 2900.



தரம்மிக்க தங்க நகைகள்

நியாய விலையில்

வாங்குவதற்கு

நம்பிக்கையான இடம்



# மொடர்ன் ஜுவலரி

இல. 32, கடற்கரை வீதி,
காத்தான்குடி - 4.


தொலைபேசி: 065-2051.

இல. 18, மத்திய வீதி,
மட்டக்களப்பு.

தொலைபேசி: 065 - 2528.

அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்.

நம்பிக்கை, நாணயம், நேர்மை
இவைகளுக்கு இன்றே நாடுங்கள்



# சுபராஜினி ஜுவலர்ஸ்

51, பிரதான வீதி, மட்டக்களப்பு.

# நீர் நிலையில் அதிசயம்!

கன்னலொடு செந்நெல் விளையும் கவின்பெறு மட்டுநகர்ப் பக்கம் பரந்த தோணா எனப்படும் வெளியை நோக்கியபடி அமிர்தகழியில் ஐங்கரன் கோயில் அமைந்துள்ளது. அக்கோயி லுக்குக் கிழக்கே கடலினுள் வாவி சங்கமமாகும் இடமொன்று உள்ளது. அந்த நீர்நிலையிலே நிகழ்ந்த அதிசயத்தைக் கூறு கிறேன்... என்று ஆரம்பித்த முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள் நீரர மகளிர்பற்றி இப்படிக் குறிப்பிடுகிறார்.


''நீருளிருந் தெழுந்து நின்றா ரரமகளிர்
ஆதலினால் மூப்பறியார் அந்தீங் குழலொலியும்
ஓதுயாழின் ஒலியுமென மொழிவார்
பைம்புனலின் மேற்படர்ந்த பாசிநிகர் கூந்தலார்
அம்பொன்னின் மேனி அரையின்கீழ் மீன்வடிவம்
செங்கமலம்போற் கரங்கள் திங்கள்மதி முகத்தில்
பொங்கிய புன்முறுவல் பூத்தார் புலமையார்
கவிமுகத்தை நோக்கிக் கனிந்துரையார்.

பொன்னின் கபாட புரத்துறைவோம் மாவலிநீர்
தன்னிற் படிந்து சமனொளியைக் கும்பிடுவோம்
ஆடுவோம், பாடுவோம், அமையாதார் தங்களையாம்
இச்சையறவே இழித்துரைக்கும் நீர்மையோம்
உருத்தெழுந்து கோபிப்போம் உண்மையுரைப்போம்
அடுத்தியொடு வீரம் அறிவோம் வியப்புறுவோம்
திங்கள் நிறைநாளிற் சேர்வோம் இந்நீர்நிலையை
கங்குல் கழியுமுன்னே கண்டிந்த மைக்கடலை
சென்றுயாம் சேர்வோம் எம் செய்கையிது''

இந்தக் காட்சியைத் தூரிகை கொண்டு துலக்கி எமக்கு அளிக்கிறார் ஓவியர் வேலு.

முத்தமிழ் விழா - 1994.

1994.



படம் அன்பளிப்பு: டாக்டர் எஸ். வேலாயுதபிள்ளை.

# மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை நிர்வாகக் குழு - 1994



## கௌரவிக்கப்படும் கலைஞர்கள்



கவிஞர் மட்டுநகர் முத்தழகு



டாக்டர் எஸ் வேலாயுதபிள்ளை
(ஓவியர்)



க. சரவணபவன்
(ஓவியர்)

த. சிவஞானமூர்த்தி
(அண்ணாவியார்)




த. கனகையா
(அண்ணாவியார்)

அமரராகிவிட்ட மூத்த உறுப்பினர்

# திரு. பி. வி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு

## அஞ்சலி



மட்டக்களப்பு / மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்தின் தலைமைத்துவத்தினால் அமைக்கப் பட்ட மட்டக்களப்பு மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை, இரண்டு வயதினை மாத்திரமே எய்தியிருப்பினும், கலையார்வமும், அனுபவங்களையும் கொண்ட பல மூத்த கலைஞர்களையும் உள்ளடக் கிச் சாதனைகள் படைத்துக்கொண் டிருக்கின்றது. இச்சாதனைகள் பல வற்றில் அமரர் திரு. பி. வி. கணபதிப் பிள்ளை ஐயா அவர்களின் பங்களிப்பு மிக மிக முக்கியமானதாகும்.

அமரர் திரு. பி. வி. கணபதிப் பிள்ளை ஐயா அவர்களைப்பற்றிப் பிரதேசப் பற்றுடன் கட்டுண்டவர்க ளாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற நாமும், கடல்கடந்து, வான் பறந்து வாழுகின்ற தமிழ்மக்கள் பலரும் நன்கு அறிந்திருப்பர்.

தன்னைத்தானே பாராட்டிக்கொள்ளாமல், நமது சமூகத்தினரால் பாராட்டு கள் பல பெற்றவர் அவர். தன்னைத்தானே வெற்றிவீரனாகப் பிரகடனப்படுத் திக்கொள்ளாமல் நம்மால் வெற்றிவீரனாக்கப்பட்டவர் அவர்.

அமரர் பி. வி. ஐயா அவர்கள் சார்ந்துநின்று சிறப்பித்த சமய, கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அத்தனையிலுமே அவர் நடந்துசென்ற பாதச் சுவடுகள், பாலைவனத்துச் சுவடுகளாகப் பதிந்து, பின்னர் மணற் புயலால் மறைந்து அழிந்தொழிந்த சுவடுகளல்ல. கற்பாறைகளில் பொறிக்கப்பட்ட அழி யாத சுவடுகளாக நமது கண்களுக்குக் காட்சியளிக்கின்றன. இதனைக் கண்ணுறும் எமது மட்டக்களப்பு மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை பெருமை அடைந்து கொண்டிருக்கின்றது. இன்றைய, நாளைய சந்ததியினரின் தேவைகளுக்கு அமரர் ஐயாவின் சேவைகள் பயனளிக்கவல்லன.

03-03-1913ல் யாழ்குடா அல்வாய்க் கிராமத்தின் விவசாயக் குடும்பத்திலே பிறந்து வளர்ந்து, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கற்று, 1935ல் கோப் பாயில் தமிழ் ஆசிரியராகப் பயிற்சி பெற்றுக்கொண்டார்.

*1936ல்* ஆசிரிய நியமனம் பெற்ற அமரர் அவர்கள், மட்டக்களப்பிற்கே சேவைக்கென வந்து. அரசடி சாதனா பாடசாலையில் ஆங்கில ஆசிரியரானார். பின்னர் ஐயா அவர்களின் வாழ்க்கைத் துணைவியாக இங்கு, கந்தசாமி மகேஸ்வரி அவர்கள் இணைந்தது மட்டக்களப்பிற்குப் பெரும் பாக்கியமாகவே அமைந்து விட்டது.

*03-09-1993ல்* எமது மண்ணின் மடியிலே தன்னை நிரந்தர உறக்கத்திற்குத் தயாராகும் வரையிலும், அவரது கம்பீரத் தொனி, அதரங்கள் உதிர்த்திட்ட அழகுதமிழ்ப் பேச்சுக்கள் அத்தனையையும், எத்தனையோ தமிழ் நெஞ்சங்கள் சுவைத்திருக்கும் என எம்மை இப்போது எண்ணத்தோன்ற வைக்கின்றது.

தள்ளாடவேண்டிய வயதினை அடைந்திருந்தும், துள்ளியோடிக் கருமமாற்றும் செயல்திறனை எமக்கு முன்னால் நின்று நிரூபித்தார் எங்கள் இரண்டெழுத்து ஐயா அவர்கள்.

''இளையர் இனமுறையா என்றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப்படும்''

என்ற வள்ளுவர் வாக்கின்படி இளையவர்களாகிய எமது நிலைக்கு ஏற்றவாறு அமைந்த புகழுடன் பொருந்த நடந்தார் அந்த அமரர்.

எமது பேரவையில் அமரர் பி. வி. ஐயா அவர்கள் இருக்கையிலே தமிழர் பண்பாட்டு உடைதரித்து அமர்ந்திருப்பதும், புருவமுயர்த்தி நெற்றிவரி எழுப்பி நியாயபூர்வமான கருத்துக்களை எம்மத்தியில் முன்வைக்கையிலே அவரது ஆளுமையின் வளர்ச்சிவீதம் அதிகரித்து, எமது அவைக்கு அழகும், கவர்ச்சியும் ஏற்படுவதைக் கண்டு நாம் மகிழ்வோம்.

மனிதம் மரணித்தலுடன் இணைந்துகொள்ளும்போது அல்லது இணைக்கப்படும்போது ''என்னதான் செய்யலாம்'' என்ற குறுகிய வாக்கியமொன்றைச் சுவாச அறையின் அடித்தளத்திலிருந்து விடுவித்துக் கொப்பளிக்கப் பழக்கப்பட்டவர்கள்தான் நாம். இந்த வகையிலே, ஐயாவின் மறைவுகேட்டுப் பேரவையினர் மனவேதனை அடைந்தோம்.

இருப்பினும், மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச கலாசாரப் பேரவையின் அடைவுகளுக்கு ஐயாவின் அறிவுரைகள் முக்கியமாய் அமைந்திருந்தன.

எனவே, இம் மலரின்மூலம் எமது மூத்த உறுப்பினராகிய அமரர் திரு. பி. வி. கணபதிப்பிள்ளை ஐயா அவர்களுக்கு மனப்பூர்வமான அஞ்சலியைச் செலுத்துவதற்காக, பேரவை மூலமாகச் செயற்படவைக்க அமரர் விருப்பத்துடன் வெளியிட்டிருந்த திட்டங்களை நாம் முன்னெடுத்துச் செல்வோம். இவைகளின் நிறைவு அன்னாரது உறவினர்களுக்கு மன ஆறுதல் அளிக்கட்டும்.

**திரு. அ. இருதயநாதன்,**
மட்/மண்முனை வடக்கு பிரதேச
கலாசாரப் பேரவை உறுப்பினர்.

# நட்பொன்று நாடகமாகிறது!

ஆனந்தா ஏ. ஜீ. இராஜேந்திரம்

"சுந்தரி மாமி... சுந்தரி மாமி...'' மோகன் கூப்பிட்ட குரலுக்குச் சுந்தரி இவ்வளவு நேரம் கணங்கமாட்டாள். ஒன்றில் அவள் வெளியில் போயிருக்க...

கொல்லைப்பக்கமாக இருந்து வந்த தேவகி அவன் கண்ணிற் பட்டாள். அவன் சிந்தனை தடைப்பட்டது.

''தேவகி...''

அப்போதுதான் அவளும் அவனைக் கண்டாள். வாயில் விரல் வைத்துச் சத்தம்போடாமல் இருக்கச் சைகை காட்டினாள். அவனுக்குப் புதுமையாக இருந்தது.

'என்ன விஷயம்?' என்று அவனும் பரிபாஷையிலேயே கேட்டான். கொண்டுவந்த விளக்குமாறை அருகிலிருந்த மாமரத்தில் சாய்த்துவிட்டு அருகில் வந்தாள்; அவனும் இரண்டடி நெருங்கினான்.

''சத்தம் போடாதீங்க... அம்மாவுக்கு இண்டைக்கு ஏறிற்றுது! என்ன மாராயமோ தெரியல்ல... அண்ணா சாப்பிட வந்த நேரம் சப்பல் ஏச்சு... அவன் சாப்பிடயும் இல்ல... வெளிக்கிட்டுப் போனவன் இன்னும் வரயில்ல... இவவுக்கு இன்னம் கொதிப்படங்கல்ல... படுக்கிறா...''

''என்னது எண்டைக்குமில்லாத புதினமாக அல்லோ இருக்கு...''

''எனக்குந்தான்... ஒண்டுஞ் சொல்லுறாவும் இல்ல... ஊர்சுத்துறான்... கூத்தாடுறான்... நாடகமாடுறான்... இதுதான் கத... இதென்ன... புதுசா...? இண்டைக்குப் பேசுற அளவுக்கு என்ன நடந்திச்செண்டுதான் விளங்கயில்ல...''

''இப்ப அவன் எங்க போயிருப்பான்? அங்க எல்லாரும் காத்துக் கொண்டு நிக்கிறான்கள்... இவனே எல்லாத்தையும் தொடங்கிப்போட்டு இப்பிடிச் சொல்லாமல் கொள்ளாமல் போறதெண்டால் எப்படியாம்?''

''பாவம் அண்ணா... அவன் எதிர்பார்க்கயில்ல... அம்மா என்னவோ எல்லாம் சொல்லி ஏச... அவன் ஏங்கிப் போனான். நானும் மனுசி இப்பிடி ஏசினத முன்ன கேட்கவேயில்ல...''

''அவன் எங்கே போயிருப்பானெண்டும் தெரியுதில்லியே... இவ்வளவு நடந்தும் வீட்டுக்குக்கூட வர இல்ல... ஒரு வார்த்த சொல்ல இல்ல...''

தேவகி ஒன்றுமே பேசவில்லை... அவள் மனதுக்குள் இலேசான ஒரு அச்சம் கவனமாகத் துளிர்விடத் தொடங்கியது. அதை வளரவிட அவள் விரும்பவில்லை... அவன் மடத்தனமான வேலை செய்யமாட்டான். அவளுக்கு அவ்வளவு தூரம் அவனில் நம்பிக்கையிருந்தது.

மோகனுக்கும் அங்கு நிற்கமுடியவில்லை. நாடகம் பழகவென்று கூட்டம் சேர்ந்து அங்கே காத்து நிற்கிறது. ஒன்றில் பழகவேண்டும், இல்லையென்றால் நேரத்தை வீணடிக்காமல் வீடுகளுக்குப் போய்விடவேண்டும். இந்த நாட்களில் அனாவசியமாக...

''எதுக்கும் முதல் நான்போய் காத்துக்கொண்டு நிற்கிறவங்களை எதையாவது சொல்லி அனுப்பிப்போட்டு... இவனப் பாக்கிறன். சைக்கிளிலயா போனவன்?''

''ஓம்''

''தேவகி... தேவகி...''

''ஐயோ... அம்மா! எழும்பிற்றாவு போல இருக்கு... நீங்க ஓடுங்க... பிறகு

உங்களிலையும் தாவிடும்...'' அவள் அவன் நிற்கிறானா? போகின்றானா என்று பார்க்கக்கூட நிற்கவில்லை.

''வாறனம்மா'' என்று பதில் கொடுத்துக்கொண்டே உள்ளே ஓடி விட்டாள்.

மோகனும் 'கேற்'றைத் திறந்து கொண்டு, சைக்கிளில் ஏறிப் போனான்.

★ ★ ★

அவனுக்குத் தெரிந்த தகவலோ சொற்பம். அதற்குள் இவன்களுக்கு விபரம் சொல்ல என்ன இருக்கிறது? ஆனால் அவர்கள் அத்தனைபேரும் சங்கரில் பெருமதிப்பும், நம்பிக்கையும் கொண்டிருப்பது அவனுக்குப் புரியும். எனவே மேலோட்டமாக எதையுஞ் சொல்லிச் சமாளிக்கவும் முடியாது.

சங்கரின் நாடகங்களுக்கு ஊரில் மட்டுமல்ல வெளியிடங்களில்கூட நல்ல மதிப்பு உண்டு. அதை அவன் தனியே சாதித்ததாக எண்ணிக்கொள்வதில்லை. இது எல்லோருடைய வெற்றி என்றுதான் அவன் பாராட்டுவான். சிலசமயங்களில் நாடகங்கள் நடத்தினால் வருமானங் கிடைக்கும். கோயில் திருவிழாக்கள்... பரிசளிப்பு விழாக்கள் என்று வரும்போது இந்த மாதிரி காசு கிடைக்கும். ஆனாலும் கிடைக்கின்ற பணத்தையெல்லாம் ஏதாவது ஒரு வகையில் நாடகங்களுக்குத் தேவையானதை வாங்கிச் சேர்க்கவே அவன் பயன்படுத்துவான். இதனால் கிடைத்த முன்னேற்றம் முழுக் குழுவுக்குமே ஒரு உற்சாகத்தை, ஆர்வத்தைக் கொடுக்கவே செய்தது.

''சரியான பிரச்சினை என்னவெண்டு விளங்கயில்ல... நாங்க நாளைக்கு இதே நேரத்துக்கு கூடுவம் என்ன...? தான் ஒரு தரம் சங்கரப் பார்த்துப் பேசிப்போட்டுத்தான் வீட்ட போவன்... சிலநேரம் அவன் எங்கட வீட்ட போயிருப்பானோ தெரியாது''.

எல்லோரும் ஒருநாள் வீணாகி விட்ட ஆதங்கத்தில் கலைந்தபிறகு மோகன் சனசமூக நிலையக் கட்டிடத்தைப் பூட்டித் திறப்பைப் பக்கத்தில் சோமண்ணன் வீட்டில் கொடுத்து விட்டு,

''என்னம்பி...? வசனம் ஒண்டும் கேக்கயில்ல... நாடகம் பழகல்லியா?'' என்ற அவரது விசாரணைக்கெல்லாம் பட்டும் படாமலும் பதிலளித்துவிட்டுப் புறப்பட்டான். அவன் சிந்தனையெல்லாம் சங்கரைச் சுற்றியபடி 'எங்க போயிருப்பான்?...'

அவன் ஒருசில மீற்றர் தூரம் போயிருக்கமாட்டான்; சைக்கிளில் சங்கர்!

''டேய்! சங்கர்!... நாசமாப் போக... நில்லடா!''

இவன் கூப்பிட்ட குரலுக்குத்தான் சுய நினைவடைந்தவன்போல, சைக்கிள் நிலைதடுமாறித் தத்தளிக்க ஒருவாறு கால் குத்திச் சமாளித்தவனாக 'ப்ரேக்' போட்டு நின்றான் சங்கர்.

''மோகன்!... நீ எங்க போறா?... நாடகம்?... எங்க ஆக்களெல்லாம்?''

''எல்லாரும் போயாச்சு! பொழுது பட்ட பிறகுதான் நாடக நினைப்பே வருகுதாக்கும்!''

''ஏன்... ஏழு மணி வரைக்கும் பழகிறவங்கதானே? பிறகென்ன ஆறரையோட கிளம்பினது?''

''தேவதாண்டா! நீ கேட்கத்தான் வேணும்! ஏன்டா? ஆறரை வரைக்கும் வராத நீ... ஏழுக்குள்ள வருவாயெண்டு சாத்திரமா பாக்கிற?... ஒரு சொல்லுச் சொல்லிற்றுப் போனியா?... எங்கடா போயிருந்த நீ...?''

அவன்தான் என்ன சொல்லுவான்? அவன் போன இடங்கள் அவனுக்கு உணர்விலே பட்டிருந்தால்தானே? கால் உழக்கியது, சக்கரம் சுழன்றது. அவன் எங்கெல்லாமோ சுற்றிக் கொண்டு 'குப்பைக் கரத்தைபோல'

இதோ பழகின இடத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறான். இந்த இலட்சணத்தில் எங்கே போனான் என்று எப்படிச் சொல்லுவது?

''சரி... சரி... நீ வீட்ட போ... அவள் தேவகி பதறினபடி இருக்கிறாள்... இனிமேல் இந்த மாதிரி மட வேலைகளைப் பாராத... போற வாற இடத்தச் சொல்லாமல் இந்த நாளையில புறப்படலாமாடா?... நாளைக்காவது இந்த மாதிரிச் செய்யாம வேளைக்கு வா... எல்லாரும் வருவான்கள்...''

சங்கர் அசைந்தமாதிரித் தெரியவில்லை. சைக்கிளைத் திருப்பிக் கொண்டு புறப்பட முனைந்த மோகன் சற்றுச் சூடாகவே கேட்டான். ''ஏன்டா டேய்! சொல்லுறது விளங்கயில்லியா?... என்ன குத்துக்கல்லாட்டம் நிக்கிறாய்? திரும்பு... திரும்பு... வா வீட்ட போவம்... நானும் வந்து விட்டிற்றுப் போறன். இந்த நாளையில இப்பிடி விசரன்போல திரியாதடா! வா... வா...''

ஏதோ முணுமுணுப்புத்தான் கேட்டது... என்ன ஏது என்று விளங்கவில்லை.

''என்னது?... என்ன சொல்லுறாய்?... ஒண்டும் விளங்கயில்ல... வா... போவம்... என்னச் சுணக்கவேணாம்''

''நீ போ... நான் தனியாகப் போவன்...'' கல்லுளி மங்கனாய் நின்றவன் சைக்கிளைத் திருப்பினான்.

''பறவாயில்லை... நானும் வாறன்... விடு சைக்கிள... வீட்ட போவம்''

''என்ன வெறிகாரன் எண்டா நினைச்சுக் கொண்டாய்!... நீ போ மோகன்... நான் தனியாப் போறன்''

''வீட்டதானே போறாய்?''

''வீடா?... எனக்கு வீடா?... நரகம்'' அரையும் குறையுமாகத்தான் மோகன் காதில் விழுந்தது.

தேவகி சொன்ன தகவலுக்கு இது ஒன்றும் புதினமான பதிலில்லை என்பது அவனுக்குத் தெரியும். நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம் என்ற நினைப்புடன் சங்கரின் பின்னாலேயே அவன் வீடுவரை போய்த் திரும்பினான் மோகன்.

★ ★ ★

''அம்மா... அண்ணாக்கு சாப்பாடு''

''சாப்பாடா... மண்ணத் தின்னச் சொல்லு...''

''அம்மா... இந்த விசர்க்கதய நிப்பாட்டப்போறிங்களா இல்லியா? இப்ப என்ன நடந்ததெண்டு புதுசாக் கொம்பி அடிக்கிறீங்க?''

''புதுசாத்தான் இருக்கும் உங்க ரெண்டு பேருக்கும்... அவர்ட நாடகமும், கூத்தும்தான் அவருக்கு உயிர்... வீட்டில ஒரு குமர்...! சோறு தண்ணிக்கு வழி... கொஞ்சமாவது எண்ணங் கவல இருக்குதா? வேளைக்கு... வயிறு நிரம்புது இல்ல?''

''அம்மா... தேவையில்லாத கதைகளைக் கிளப்பி அவனைச் சாப்பாடு இல்லாமல் படுக்கவைக்கப்போறீங்க..''

''படுக்கட்டும்... எனக்கென்ன...? வீடுவாசலில ஒரு அக்கறையில்ல... ஒரு ஆனமான தொழிலத் தேடுவம் எண்டில்ல... அந்த மனுசன்ட பென்சன் காசும் இல்லாட்டால் நானும் நீயும் ரோட்டில... கொஞ்சமாவது யோசிக்கிறானா...? இவன்ட நாடகமா இங்க சோறு போடுது?...'' அவள் குரல் தழுதழுத்தது. கண்களில் நீர் முட்டிக் கொண்டு நடப்பதை வேடிக்கை பார்க்குமாப்போல் தேங்கி நின்றது.

''ஏன்மா? எண்டைக்குமில்லாம... இண்டைக்கு மட்டுமா அவன் தொழில் இல்லாம இருக்கிறது தெரிஞ்சுது...? ஏன் சும்மா அவன திட்டுறீங்க... அவன் வேணுமெண்டா இப்பிடி இருக்கிறான்? தொழில் எண்டால் 'அப்ளிக்கேஷன்' போட்ட கையோட தூக்கித் தந்திடுவான் எண்டா நினைச்சீங்க... அவனும் தெண்டிச்சுப் பாக்கிறான்தானே... சும்மா தறுதலையா ஊரச்சுத்தித் திரி

யாம ஒழுங்கா நாலுபேரச் சேர்த்து உருப்படியான காரியம் பாக்கிறது உங்களுக்கே ஒத்துவர இல்லியா?''

"ஓம்... அவனக் குறையவிடாத... அவர்ட உருப்படியான வேல ஊருக்குத்தான்... வீட்டில புஸ்வாணம்... நாளைக்கு உனக்கொரு வழியப் பாக்கிற இல்லியா?... அங்க பார்... அவள் மாலதிக்கு கலியாணம் சரிவந்திற்றாம்.. பாஸ்கரன்தானே ஓடித்திரிஞ்சு அலுவல் பார்த்திருக்கான்... ஏன் அவனும் நாடகம் போட்டுத் திரியாம இந்த வேல பாக்கிறான்?... அவனுக்கு அறிவு போதாது போலயிருக்கு...''

''அடி சக்கண்டானாம். யாரு சொர்ணம் மாமியா வந்தவ...? கூடக் கணக்கில புளுகிக் கொட்டியிருப்பாவு... அதத் தூக்கி மடியில கொட்டிக் கொண்டு நீங்க ட்ராமா காட்டுறீங்களா?... நல்லாயிருக்கு... இங்கு கலியாணம் கட்டித்தா எண்டு யாரும் உங்களக் கெஞ்சினவங்களோ? ஏன்மா வானத்தால போற பிசாச ஏணிவைச்சு இறக்கி தலையில தூக்கிவைக்கிறீங்க... ஐயோ... மாலதிட கலியாணம்தானா இவ்வளவுக்கும் காரணம்...''

''ஓம் அவள் கேட்டுத்தான் இவங்க ஏற்பாடு பண்ணினாங்க... நானும் நீ சொல்லும் வரைக்கும் பொறுக்கிறன்... எங்களுக்கு எண்டு ஒரு எண்ணங் கவல இருக்கக்கூடாதாக்கும்... பெத்து வளர்த்து விட்டிற்றம் பாரு... பேசுவீங்க...''

தேவகிக்கு அழுவதா சிரிப்பதா தெரியவில்லை. அவளால் ஊகிக்கமுடியும். எந்த அளவுக்கு சொர்ணம் மாமி அம்மாவுக்குத் திரி வைத்திருப்பாள் என்று. ஆறுதலாகச் சொன்னாள்.

''அம்மா... மாலதிக்கு காலம் வரவும் காரியம் கைகூடுது... எனக்கும் காலம் வரைக்குள்ள அதது வராமலா போகும்?... நீங்க அழுது மாரடிச்சிற்றா மட்டும் அண்ணாக்கு வேல கிடைச்சு எனக்கும் கலியாணம் வந்திடுமா? சும்மா ஏனம்மா அண்ணாவத் திட்டுறீங்?... ...நாளைக்கு மனசு தாங்காம ஏதும்...'' கலங்குவது இவளது முறையாயிற்று!

அங்கே ஒரு அமைதி! சுவர்க் கடிகாரத்திலே எழும்பிய 'டிக்', 'டிக்' ஓசையைத் தவிர ஒரு சத்தமும் வரவில்லை.

அவள் போட்ட கேள்விக்குறியில்லாத கடைசிக் கேள்வி தாய், மகள் இருவர் மனத்திலும் ஒரு தாக்கத்தைக் கொடுக்கவே செய்தது.

"அவன வந்து சாப்பிடச் சொல்லு"

தேவகிக்குச் சிரிப்புத்தான் வந்தது. ''அம்மா... அம்மா...! ஏசியும்கொள்ளுவீங்க... சாப்பாடும் போடுவீங்க...''

''அதான் பெத்த மனம் பித்து எண்டு சொல்லுறாங்க''

''அண்ணா... அண்ணா... போச்சுடா!'' அறைக்குள் சென்று சாப்பிடச் சொல்லிக் கூப்பிட்டுவரப் போனவள் அவன் ஆழ்ந்த உறக்கத்திலிருக்கக் கண்டாள். கட்டிலின் அருகிலிருந்த மேசை மீது தண்ணீர்ப் போத்தல் வெறுமையாகக் கிடந்தது.

அவளுக்குத் தாயோடு பேசவும் மனமிருக்கவில்லை. ''அந்தா அவன் சாப்பிடாமப் படுக்கிறான்... எனக்கும் இங்க பசிக்கயில்ல...''

''வெறும் வயித்தோட படுக்காத... அவனுக்குத்தான் ஆங்காரமெண்டால்... நீ ஏன் வெறும் வயித்தோட படுக்கவேணும்?''

தேவகி சாப்பிடமாட்டாள் என்று அவளுக்குத் தெரியும். 'ஏன்தான் மத்தியானம் வாய்விட்டோமோ' என்று இப்போதுதான் ஆதங்கப்பட்டாள்.

ஒருவேளைக்குத் தான் பேசியது சரியென்றுதான் பட்டது. இப்படியான நேரங்களில் தன் கணவனையும் அவள் நொந்துகொள்ளவே செய்தாள். படிப்பிக்கிற பாடசாலைகளெல்லாம் அவர் இருக்குந்தனைக்கும் நாடகப் போட்டிகளில், இசைப் போட்டிகளில் முதலிடம்தான். ஓய்வு நேரங்களில்கூட 'டியூஷன்' கொடுத்தாவது உழைப்போமென்றாவது நினைத்ததில்லை. எங்காவது, எதற்காவது நாடகம் என்றும்,

பாட்டு என்றும் மாணவர்களை ஊரில் அண்டை அயல் பையன்களை வைத்து ஏதாவது பண்ணிக்கொண்டேயிருப்பார். வீட்டு அலுவலெல்லாம் அவளது தலையில்...! பெண் ஒருத்தி வயசுக்கு வந்து காலமாயிற்றென்றாவது நினைத்து ஒரு செப்புக் காசுகூடச் சேர்த்துக்கொள்ளவில்லை.

இவனோ அப்பனுக்குத் தப்பாமல் பிறந்தவனாக கூத்து, நாடகம்...!

எவ்வளவு நேரம் அப்படியே யோசித்தபடி இருந்தாளோ தெரியவில்லை. திடீரென்று சுயநினைவு பெற்றவள், வயிறு நிறையத் தண்ணீரைக் குடித்துவிட்டு, எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்திவிட்டுப் படுக்கப் போனாள்.

* * *

"ஏன் சங்கர்... நீ காலையிலயும் சாப்பிட இல்லியாமே...? ஏண்டா வீணா வைராக்கியம் காட்டுறா... அந்த மனுசியும் ஏதோ ஆத்திரத்தில பேசிப் போட்டுது எண்டால்!...நீயென்னடா... ஒரு வகையில அவ சொல்லுறதிலயும் நியாயம் இருக்குதடா!''

''என்னடா நியாயம்...? நான் வேணுமெண்டா தொழில் இல்லாமத் திரியிறன்...? நீயறிய எத்தன 'அப்ளிகேசன்' போட்டிருப்பன்... எத்தன பேரக் கெஞ்சியிருப்பன்... தங்கச்சிட அலுவலப்பத்தி கவலப்படாம நான் ஒண்டும் குதிச்சுத் திரியல்ல... எனக்கு அந்தக் கவல இருக்கு... அதுக்காக மூலயில போய் குந்திக்கொள்ளவா?''

''என்ன இருந்தாலும் நீ இந்த நாடகம், அது இது எண்டு செலவளிக்கிற நேரத்தக் கொஞ்சம் குறைச்சுப் போட்டு தொழில் விஷயத்தில கொஞ்சம் கூட கவனஞ் செலுத்துறது நல்லமடா... பொறு, பொறு... அவசரப் படாத... நாங்களும் கொஞ்சம் யதார்த்தமா இருக்கவேணுமடா...! எங்கட பகுதியில இந்தமாதிரி கலையால வாழ்ந்தவங்க யார்டா இருக்கிறாங்க? யாருக்கடா நாடகமும், கூத்தும், பாட்டும் சோறு போடுது? எங்கட சனங்கள் காசு கொடுத்து நாடகம் பார்த்து ஆதரிக்கிற மனப்பக்குவத்துக்கு இன்னம் வரயில்ல... சிங்களப் பகுதியப் பார்... அங்க வேறு கத... எல்லா வசதி வாய்ப்பும் இருக்குது... ஏட்டிக்குப் போட்டியா நாடகம், இசை, நடனம் எண்டு எல்லா இடத்திலயும் நடக்குது! நல்ல கூட்டமும் சேருது... வருமானமும் நிறைய... இங்க அந்த நில வரும்... ஆனா காலம் எடுக்கும்டா...அதுவரைக்கும்...'' மோகன் முடிக்கமுன்னமே சங்கர் குறுக்கிட்டான்.

''டேய் மோகன்... அதுவரைக்கும் காலம் சரிவரட்டும் எண்டு ஒதுங்கவா சொல்லுறாய்! இது... இது காசுக்காக... வருமானம் பார்த்து நான் செய்யிற வேல எண்டா நினைக்கிறாய்?... இது என்ட இரத்தத்தில ஊறினதொண்டுடா!... என்னால இத வச்சுக்கொண்டு சும்மா இருக்கமுடியாது... இதில தான்டா எனக்கு மனநிம்மதி கிடைக்குது... சந்தோஷம் கிடைக்குது''

''எனக்கும் தெரியுமடா! ஆனாலும் வீடு வாசல் என்டொரு பொறுப்பையும் மறக்க ஏலாதே... காலையில அம்மா ஒவ்வொண்டா... ஒவ்வொருத்தராச் சுட்டிப் பேசைக்குள்ள... என்னால மறுக்கமுடியல்ல... பாஸ்கரன் எப்படியெல்லாமோ சிரமப்பட்டு மாலதிக்கு ஒரு வழிபண்ணியிருக்கிறான். விசு... வெளியில... இப்ப வீட்டு வேலயும் முடிஞ்சு... குடும்பம் இனி இல்ல எண்ட 'ஸ்டைல்'. இதெல்லாம் மனிசி அறியக்குள்ள தன்ட வீட்டு நிலமய யோசிக்காதா...? ஆத்திரத்தில பேசாதா...? அது சரி... விசு உனக்கு உதவி செய்வேனெண்டு எழுதியிருந்தானாமே போன கடிதத்தில... அவனக்கேட்டு நீயும்கூட வெளியில போவன்... நாலு காசு கையில சேர்த்து இதவிட நிரந்தரமா ஒரு 'க்ரூப்' வைச்சு நாடகம் நடத்தயும் முடியுமல்லவா...? ஏன் கேட்கயில்ல நீ...?''

''அத வேற சொன்னாவா?... நான் அவனிட்ட இந்த நாடகப்போட்

டியப் பத்தி எழுதி, காசு இருந்தால் நல்லதா உடுப்பெல்லாம் ஆயத்தப் படுத்தலாமெண்டு சொன்னன்... அதான் அப்படி எழுதியிருந்தவன்... அடுத்த லெட்டரில ஒரு சந்தோஷமான செய்தி வரும் எண்டும் எழுதியிருந் தான்... நான் நினைக்கிறன் காசு ஏதும் அனுப்பி வைப்பான் எண்டு...''

''அடுத்த கடிதம் வரமுதல் நாட கப்போட்டி முடிஞ்சிடும்... பின்னேரம் வேளைக்கு வருவியா? இல்ல...''

''வருவன்... யார் என்ன கதைச் சாலும் எனக்குக் கவலயில்ல... நான் நினச்சதச் சாதிச்சே தீருவன்...''

''கேட்க நல்லா இருக்கடா... ஆனா இதே வேகம் வீட்டு விஷயத் திலயும் இருக்கட்டும்... தொழில் தேடுற விஷயத்திலயும் வேகம் வேணும்''

சங்கர் பதிலேதும் தரவில்லை. வேதாளம் முருங்கையில் ஏறாதவரைக் கும் சரிதான் என்று புறப்பட்டுப் போனான் மோகன்.

★ ★ ★

நாடகப் போட்டியில் பெற்ற வெற்றி வீட்டில் ஓரளவு சுமுக நிலை யைக் கொண்டுவந்திருந்தது.

ஊரெல்லாம் கோயில் திருவிழா தொடங்கும் காலம்... எனவே அவனது நாடகத்தைக் கேட்டு இரண்டு மூன்று வேண்டுகோள்கள். அதைப்பற்றிப் பேசவும் முடிவெடுக்கவும் மோகனும், சாந்தனும், திருநாவுக்கரசுவும் வந் திருந்தனர்.

எத்தனைபேர் கேட்டாலும், எவ் வளவுதான் கேட்டாலும் ஒரு நாட கத்தைப் போட்டுச் சக்கையாக்க விரும்பவில்லை. தேவையென்றால் வேறு நாடகங்களைப் பழகியெடுக்கக் கூட அவன் தயாராக இருந்தான்.

மற்ற மூன்றுபேரும் இதையே ஆமோதித்தார்கள். முடிவு எடுப்பது சிரமமாயிருக்கவில்லை. அப்போது பார்த்து தபால்காரனும் கடிதத்துடன் வந்தான். தேவகிதான் ஓடிப்போய் வாங்கிவந்தாள். வெளிநாட்டுக் கடிதம். அவனுக்கு எழுதக்கூடிய ஒருத்தனென் றால் விசு மட்டும்தான்.

நிச்சயமாகக் காசு அனுப்பியிருப் பான். நல்ல தேவைக்குத்தான் வந்து சேர்ந்திருக்கிறது. இதுவரைக்கும் நடத் தாத அளவுக்கு ஆடம்பரமாக நல்ல 'செட்டிங்'களுடன், இந்தமுறை திரு விழாவில் நாடகம் நடத்தவேண்டும்... பதைக்கின்ற உள்ளத்துடன் அவசர அவசரமாக உறையைக் கிழித்துக் கடி தத்தை எடுத்துப் பிரித்தான். 'செக்' ஒன்றுங் காணம்... திரும்ப உறைக்குள் ஊதிப்பார்த்தான். ம்கூம்! ஏமாற்ற மாகிப் போய்விட்டது.

வெளியில் அதைக் காட்டாமல், கடிதத்தைப் படிக்க முற்பட்டான். அவனை அக்கறையோடு பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு அவனில் ஏற் பட்டுக்கொண்டிருந்த மாற்றம் அதிசய மாயிருந்தது.

''டேய்! மோகன்... அம்மா...! என்ன எழுதியிருக்கிறான் பாருங்க...''

''என்னப்பா அது...?''

''நாசமாப்போக... நான் தொடக் கத்தில என்னமோ ஏதோ எண்டு நினைச்சன்...''

''டேய் 'சஸ்பென்ச'க் கூட்டா தடா! என்ன எழுதியிருக்கிறான்?''

''அம்மா... டேய் மோகன்...'' தன்னை நிதானத்துக்குள் கொண்டுவர முயற்சித்தவனாக ''அம்மா... விசு... அப்பாட்டத்தான் படிச்சவனாம்... தன் னில இருந்த திறமைய அவர்தான் கண்டுபுடிச்சி வளர்த்தவராம்... அதால...''

''அதால...?''

''அதால... தேவகிய அவன் கலி யாணம் பண்ண விரும்புறானாம்...''

பிறகென்ன? அங்கே ஒரே ரகளை தான்.

சங்கரின் மனக்கண்ணில், திருவிழா மேடையில், விசுவை முன்வைத்து நாட கம் உருவாகிக்கொண்டிருந்தது. ●

வனப்புமிகு நகைகளுக்கு
வனிதையர்கள் தேடி நாடுமிடம்.

ஓடர் நகைகள் 22 கரட் உத்தரவாதத்துடன்
செய்து தரப்படும்.



# நஜீறா கோல்ட் ஹவுஸ்

14, மத்திய வீதி, மட்டக்களப்பு.

தொலைபேசி: 065 - 2984





காலத்திற்கேற்ற
கவர்ச்சிமிகு நகைகளுக்குக்
கன்னியர்கள் நாடுமிடம்,


குறித்த தவணையில்
மாற்றுத் தவணையின்றி
கைதேர்ந்த வேலைப்பாடுகளுடன்
22 கரட் தங்க நகைகளுக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

# ரவி ஜுவல்லரி

69, பிரதான வீதி, மட்டக்களப்பு.

அழகிய சிறந்த பவுண் தங்க நகைகளுக்கு

நம்பிக்கையான இடம்



## கஜந்தி

★ ஓடர் நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன் செய்துதரப்படும்.

★ பழைய தங்கம் நியாய விலைக்கு வாங்கப்படும்.

நவீன டிசைன் நகைகளுக்கு

# கஜந்தி ஜுவலர்ஸ்

78 A, பிரதான வீதி, மட்டக்களப்பு.



அழகிற் சிறந்த பவுண் தங்க நகைகளுக்கு

நம்பிக்கையான இடம்.

உத்தரவாதத்துடன்

ஓடர் நகைகள் செய்துதரப்படும்



# உதயா நகை மாளிகை



இல. 39, பிரதான வீதி,

மட்டக்களப்பு.

தொலைபேசி: 065-2619.

# இரும்பரசன் சாண்டோ சங்கரதாஸ்

மட்டுநகர் முத்தழகு.

இலங்கையின் புகழை வையக மெல்லாம் பரப்ப வகைசெய்த பெரிய வர்களுள் 'இரும்பரசன்' என்று பெயர் பெற்ற சாண்டோ சங்கரதாசும் ஒருவ ராவார். தனது உடல் வலிமையால் சாகசச் செயல்களைச் செய்துகாட்டி மக்களைக் கவர்ந்த பெருமகன் இவ ராவார்.

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இலங்கையின் நகரங் கள் பலவற்றிலும் சாகசச் செயல்கள் செய்து புகழ்பெற்றதோடு மாத்திர மின்றி வெளிநாடுகள் பலவற்றிற்கும் சென்று வீரதீரச் செயல்கள் செய்து காட்டிச் சொந்த நாட்டின் புகழை ஓங்கச்செய்த பெருமை இவருக்கு உண்டு.

1925ம் ஆண்டிலே இந்தியாவி லிருந்த ஆங்கிலேயத் தேசாதிபதி முன் னிலையிலே இரும்புக்கம்பியை வளைத் தும், சங்கிலியை உடைத்தும் தன் திற மையை நிலைநாட்டிய இவர் 1926ம் ஆண்டு கமலா சர்க்கஸ் குழுவினர் மட் டக்களப்பிற்கு வந்தபோது அக் குழு வினருடன் இங்கு வந்தார். இரண்டு யானைகளைத் தனது மார்பிலே ஏற்றி இறக்கியபோது ''வீமன் மகன் கடோற் கஜன் வாழ்க'' என மக்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தனர்.

அதைத்தொடர்ந்து இலங்கை யெங்கும் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்த போது காலியிலே 'நிலாமை' என்ற பெயருடன் விளங்கிய முன்னைநாள் மந்திரி தகநாயக்கா அவர்களின் தலை மையிலும், திருமலையில் சேர் ஜோண் கொத்தலாவலை அவர்கள் தலைமை யிலும் பல நிகழ்ச்சிகளைச் செய்துகாட் டினார்.

1938ம் ஆண்டு கண்டியிலே ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். பெரகரா நிகழ்ச்சிகளிலே முதன்மை தாங்கும் பன்னிரண்டடி உயரமான கொம்பன் யானை கொண்டுவரப்பட் டது. யானை ஒரு பக்கமிருந்து மறு பக்கம் செல்வதற்கு ஐந்து செக்கன் அல்லது எட்டுச் செக்கன். அந்தக் குறிப் பிட்ட நேரத்துக்குள்ளே முடித்துவிட வேண்டும். வந்த யானையோ ஐந்து செக்கன் அவரது மார்பிலே நின்று கொண்டு இறங்கவே மறுத்துவிட்டது. பன்னிரண்டு செக்கனாகிவிட்டது. குறிப்பிட்ட நேரத்துக்கு மேலாக அப் பாரத்தைத் தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் சாண்டோவின் உடலிலிருந்து பன்னிரெண்டு துவாரங்களின் வழியாக இரத்தம்வெளிவரத்தொடங்கிவிட்டது. நினைவிழந்த சாண்டோ வைத்திய நிலையத்திலே பத்து நாட்களாக நினை விழந்து கிடக்கவேண்டியதாயிற்று.

1946ம் ஆண்டு வைகாசித் திங்களிலே இந்தியாவில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அதிலே சாண்டோ அவர் களது சிறப்பு நிகழ்ச்சி சிங்கத்தோடு போராடுவதாக இருந்தது. சிங்கக்கூண் டுக்குள்ளே சாண்டோ சிங்கத்துக்கா கக் காத்துநிற்கின்றார். சிங்கம் பெரும் கர்ச்சனையோடு பாய்ந்துவந்தது. முதல் பாய்ச்சலைக் குனிந்து சமாளித்து விட்டார். இரண்டாவது பாச்சலின் போதுதான் சாண்டோவுக்கு விசயமே

விளங்கியது. அந்தச் சிங்கம் சில நாட்களுக்கு முன்தான் ஆபிரிக்காக் காட்டிலே இருந்து கொண்டுவரப்பட்டது. அதன் பெயர் ''ஹெர்குலஸ்''. பழக்கப்பட்ட சிங்கத்தின் பெயர் ''ராஜா''. ராஜாவின் கூட்டைத் திறக்காமல் சூழ்ச்சியின் காரணமாக வேறு கூட்டைத் திறந்துவிட்டார்கள். சாண்டோ மனம் தளரவேயில்லை. அதனுடனே கட்டிப்புரண்டு எழுந்துநின்று அதன் தலையைத் தனது துடைகளின் இடுக்கிலே வைத்து அதன் வாயைப் பிளந்து சிங்கத்தைத் தோற்கடித்துவிட்டார். அவர் வைத்தியசாலையில் இருந்து வந்தபோது ''ஹெர்குலஸ் சாண்டோ சங்கரதாஸ்'' என்றே மக்கள் அழைத்தார்கள்.

அந்த நாட்களிலே மைசூர் மகாராசா உலக மல்லர்களுக்கும், சாண்டோக்களுக்கும் ஒரு அழைப்பு விடுத்தார். இவ்வழைப்பையேற்று இலங்கையின் சார்பிலே சாண்டோ சங்கரதாஸ் அவர்கள் சென்றார்கள். அவ்வரங்கிலே எல்லாச் சாகச வீரதீர விளையாட்டுக்களும் நடந்து முடிந்துவிட்டன. கடைசியாக இலங்கைச் சாண்டோவிற்கு அழைப்பு வந்தது. சாண்டோ அவ்வரங்கிலே அமர்ந்து யோசித்தார்கள். வந்திருந்த அனைவருமே எல்லா தீர வீர நிகழ்ச்சிகளையும் செய்து முடித்துவிட்டார்கள். இன்னும் தன்னால் செய்வதற்குப் புதிய நிகழ்ச்சிகள் ஒன்றுமே இல்லை என்று நினைத்த நேரத்திலே தான் ஆனைக்குட்டிச்சாமியை நினைத்தார். ''நீ என்னை நினைத்தால் அந்த இடத்திலே வந்து உனக்கு உதவி செய்வேன்'' என்று அவர் முன்பு ஒரு சந்தர்ப்பத்தில் கொடுத்த வாக்குறுதி நினைவுக்கு வந்தது. தனது தலையிலே வெள்ளைத் துணியை விரித்துக்கொண்டார். மைசூர் மகாராஜாவும், வந்திருக்கும் வீரர்களும், அவையோர்களும் வேடிக்கை பார்த்தார்கள். சாண்டோ மகாராஜாவிடம் சொன்னார்: ''ராஜாவே, இங்கு வந்தவர்கள் அனைவருமே எல்லா தீரவீர நிகழ்ச்சிகளையும் காட்டிவிட்டார்கள். ஆகவே நான் புதிய விளையாட்டைக் காட்டவே விரும்புகின்றேன். இங்கு இருக்கும் பெரும் மல்லர்களில் யாராவது ஒருவர் ஒரு பெரும் கேடயத்தால் என் தலையிலே அடிக்கட்டும்'' என்றார். மகாராஜா உட்பட எல்லோருமே மலைத்துவிட்டனர். தலையிலே அடிப்பதா? அதுவும் கேடயத்தாலா! மகாராஜா முடியாது என்று மறுத்துவிட்டார். சாண்டோ அவர்கள் ''என் உயிருக்கு உத்தரவாதமாக நான் எழுத்தில் தருகிறேன்'' என்று கூறியபின்புதான் அந்த அற்புத நிகழ்ச்சி நடந்தது. இரும்பும் இரும்பும் அடிபட்டால் எந்தச் சத்தம் வருமோ அதே ஓசைதான் ஒலித்தது. சாண்டோவின் தலையிலே அடித்த இரும்புக் கேடயம் வளைந்து நிலத்திலே கிடந்தது. மகாராஜா எழுந்து ஓடிவந்து அவரை ஆரத்தழுவி ''இரும்பரசன்'' என்ற பட்டத்துடன், பெரும் வெள்ளிக் கதாயுதம் ஒன்றையும் பரிசளித்தார்கள். அவர் வந்த கப்பல் இலங்கைத் துறைமுகத்தை வந்தடைந்ததும் இரும்பரசனின் நண்பரான சேர் ஜோண் கொத்தலாவலை அவரை வரவேற்று, அலங்கரிக்கப்பட்ட யானை ஒன்றிலே அவரை ஏற்றி அந்தக் கதாயுதத்துடனே கொழும்பு நகரெங்கும் பவனிவரச் செய்த அந்தக் காட்சி இனமத பாகுபாட்டை மறந்து, திறமைக்கு உரிய இடம் கொடுத்த ஒரு நிகழ்ச்சியாக அமைந்தது. அந்த அருமையான சம்பவம் மறக்கமுடியாத ஒரு நிகழ்ச்சியாகும்.

# வளமான வாழ்விற்கு

வாழ்க்கையெனும் அலைகளிலே மோதி – நீ
வருந்தி வாழ்ந்ததை மற்றோர்க்குப் போதி
மனதில் சுமக்கும் வேதனைப் பொதி – இது
மறைந்திட்டால் என்றும் நிலைத்திடும் ஜோதி.

★ ★ ★

அநீதிகளால் பாரினில் நாளும் பீதி – இவை
அனைத்தையும் புதைத்து நெறிப்படுத்தவே நீதி
சிந்தனையில் தெளிவென்றால் சிலர் ஏன் கைதி
சிரம்பணிந்து வாழ்ந்திட்டால் வேறென்ன வையகத்தில் – மீதி

★ ★ ★

உதிரத்தில் தெரிவதில்லை மானிட சாதி – இதை
உணர்ந்து வாழ்பவரே நியாயத்தின் வாதி
உயர்வும், தாழ்வும் வாழ்விலிரு பாதி – இதில்
உறுதியுடன் வாழ்பவரே நல்மனித ஜாதி.

★ ★ ★

ஒற்றுமையை கலைத்திடவே நாளும் சில சேதி
வேற்றுமையில் கலைந்திடவே சேரும் அந்த விதி
ஒன்றுபட்டு வாழ்பவரே சமூகத்தின் தாதி – இதனை
உரமிட்டுக் காப்பவரே அனைவர்க்கும் நாதி.

★ ★ ★

அன்பினை அழித்துவிடும் சிலரின்சதி – இவை
அனைத்தையும் வென்றிடவே அறிவு நிறை மதி
நினைப்பதை ஏற்பதும் தடுப்பதும் இறைவனின் நியதி
நிலையான வாழ்விற்கு அவன் ஒருவனே கதி!

**செல்வி ஹபீபா இஸ்மாயில்**
ஆசிரியை,
மட் / மெதடிஸ்த மத்திய கல்லூரி.

நம்பிக்கையான

நவநாகரீக

நகைகளுக்கு

நாடுங்கள்



# சுபா கோல்ட் ஹவுஸ்

**40 A, பிரதான வீதி, மட்டக்களப்பு.**

---

# UNITED STATIONERS

★ பாடசாலைப் புத்தகங்கள்

★ காரியாலய உபகரணங்கள்

★ கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத் தயாரிப்புகள்

★ போட்டோ பிரதி, பாக்ஸ் கடதாசி ஸ்ரோணர் வகைகள்

**நியாய விலையில் எம்மிடம் கிடைக்கும்.**

# யுனைற்றட் ஸ்ரேசனர்ஸ்

**இல. 73, முனை வீதி, மட்டக்களப்பு.**

# மட்டக்களப்பில் நவீன கவிதை

வீ. ஆனந்தன்

மட்டக்களப்பு என்பது ஒருகாலத்தில் வடக்கே வெருகல் ஆற்றிலிருந்து, தெற்கே குமுக்கன் ஆறுவரை உள்ள ஒரு நீண்ட நிலப்பகுதியைக் குறித்தது. ஆனால் 10-04-1961ம் ஆண்டு அம்பாரை மாவட்டம் பிரிக்கப்பட்ட பிறகு மட்டக்களப்பு என்பது வடக்கே வெருகல் ஆற்றையும், தெற்கே அம்பாரை மாவட்டத்தையும், மேற்கே பொலனறுவை மாவட்டத்தையும், கிழக்கே வங்காளவிரிகுடாக் கடலையும் எல்லையாகக் கொண்ட 2637.7 ச. கிலோ மீற்றர் பரப்பளவைக்கொண்ட மட்டக்களப்பு இறைவரி மாவட்டத்தையே குறிக்கும். இந்த மாவட்ட எல்லைக்குள் தோன்றி வளர்ந்துவரும் நவீன கவிதைகளையும், நவீன கவிஞர்களையும் பற்றி மட்டுமே இக்கட்டுரை பேசும்.

மரபுவழிக் கவிதைகள் பொதுவாக சமயசார்பான விடயங்களை உள்ளடக்கமாகவும், காவியம், உலா, பரணி, பள்ளு, கோவை, குறவஞ்சி போன்ற பிரபந்த வகைகளை வடிவமாகவும் கொண்டவை. மரபுக் கவிதையின் உள்ளடக்கம் வரையறுக்கப்பட்டது போலவே உருவமும் வரையறுக்கப்பட்டது. ஆனால் நவீன கவிதையிலோ சாதாரண மனிதனும், அவனது அன்றாட வாழ்க்கை அனுபவங்களுமே அதிகமாக இடம்பெற்றது. அப்பனைப் பாடிய வாயால் ஆண்டி சுப்பனைப் பாடுவேனோ என்ற நிலைமாறி ''இன்னவைதான் கவி எழுத ஏற்ற பொருள் என்றில்லை'' என்ற நிலை ஏற்பட்டது. இது நவீன கவிதையின் அடிப்படைகளில் ஒன்று. கவிதையில் தெய்வமும், திருத்தலமும், சமயாசாரமும் பெற்ற இடத்தைப் பொதுமனிதனும், அவனது இருப்பும் அன்றாட வாழ்க்கை அனுபவமும் பெற்றது. சுருக்கமாகச் சொன்னால் சமய நெறியிலிருந்து சமூக நெறிக்குக் கவிதை மாறியது. இந்த உள்ளடக்க மாற்றம் காரணமாகக் கவிதையின் உருவமும் வெகுவாக மாற்றம் அடைந்தது.

இந்த நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் மட்டக்களப்பின் நவீன சிந்தனை உடைய மரபுவழிக் கவிஞர். பழைய மரபிற்கும் நவீன மரபிற்கும் இடைப்பட்டவர். இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலச்சிந்தனை போக்குகளாக சமூகம், தேசியம் போன்றவை இவருடைய 'பேராசை வேண்டாம்', 'பெரும்பான்மை வகுப்பாட்சியும் மதசார்பும்' போன்ற கவிதைகளில் காணப்படுகின்றது. இன்றைய அர்த்தத்தில் இவரை மட்டக்களப்பின் நவீன கவிதையின் முன்னோடி என்று கருதமுடியாது.

இவருக்கு அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவர்கள்மூலம் முற்றிலும் நவீனத்துவம் உடைய கவிதைமரபு ஒன்று தோன்றி வளர்ந்தது. இத்தலைமுறையினர் அன்றாட வாழ்வில் நாம் எதிர்நோக்கும் சமூக, அரசியற் பிரச்சனைகள், தனிமனித உணர்வுகள், ஆசாபாசங்கள், அனுபவங்கள் போன்றவைகளைப் பாடுபொருளாகக் கொண்ட கவிதைகளை எழுதினர். இந்தத் தலைமுறையைச் சேர்ந்தவரும் ஈழத்து நவீன கவிதை முன்னோடிகளில் முக்கியமான வருமான புரட்சிக்கமாலே மட்டக்களப்பின் முதலாவது நவீன கவிஞர் ஆவார். இவரைப்பற்றி ''பெயருக்

கேற்ற புதுமைக் கருத்துக்களை உடையவர். இவரது ஒவ்வொரு பாடலும் ஏதோ ஒரு சிந்தனையையோ, உணர்ச்சியையோ எடுத்துக்கூறுவதாக அமைந்துள்ளது. அரசியல், சமூக – பொருளாதார அழுக்குகளை நீக்கிப் புதுவாழ்வும், பொதுமைவாழ்வும் தேடிச்சமைப்பதே இந்தயுகத்தின் இலட்சியம் எனக் கொண்டவர்'' என்று பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் கூறுகிறார்.

இவர் பின்நாளில் இஸ்லாமிய மரபுணர்ச்சிக் கவிஞராக மாறியபோதிலும், இவரது ஆரம்பக் கவிதைகளில் யாவருக்கும் பொதுவான இலட்சியங்களை எடுத்தாளுகிறார்.

''அணுக்குண்டு தனியுடமை
பிணக்காடு செய்பகைமை
துணுக்குற்று நீறுமெனக்
கொட்டுமுரசே''

என்ற கவிதையும்,

''உழைப்பாரை வஞ்சித்து
உயர்வாழ்வு தாங்கிடும்
உலுத்தர்க்குப் பல்லாண்டுக்
கீதம் இல்லை''

என்ற கவிதையும் இவருடைய மிகப் பிரபலமான கவிதைகள்.

1956ம் ஆண்டின் இலங்கை அரசியல் நிகழ்வுகள் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் ஒரு உத்வேகத்தை ஏற்படுத்தியது. அது மட்டக்களப்பில் மொழிவழி இன உணர்ச்சிக் கவிதைககள் தோன்றக் காரணமாய் அமைந்தது. இராஜபாரதி, காசி ஆனந்தன் ஆகியோர் மொழிவழி இன உணர்ச்சிக் கவிஞர்களுக்கு உதாரண புருஷர்கள். மொழிவழி இன உணர்ச்சிக் கவிதைகள் பாடிய இவர்களைப்போலவே சுபத்திரனும், சி. மௌனகுருவும் வர்க்க உணர்ச்சிக் கவிதைகளைப் பாடினார்கள். சுபத்திரனுடைய ஆரம்பகாலக் கவிதைகள் நேரடிப் பிரச்சாரப் பாங்கான அரசியற் கவிதைகளாக இருந்தன. ஆனால் பிற்காலத்தில் கலாபூர்வமான கவிதைகள் எழுதத்தொடங்கிய நேரத்தில் இவர் அகால மரணம் அடைந்தது முற்போக்கு இலக்கியத்திற்கு ஈடுசெய்யமுடியாத இழப்பே. ''சங்காளைக்கென்வணக்கம் சரித்திரத்தில் உன்நாமம் மங்காமல் நிலைத்திருக்கும்'' என்று பாடிய சுபத்திரனின் நாமமும் ஈழத்து வர்க்கப் போராட்ட வரலாற்றில் நிலைத்திருக்கும். இவரைப்போலவே தமது கவிதைகளில் முற்போக்குச் சிந்தனையைப் பிரதிபலிக்கச் செய்தவர் சி. மௌனகுரு அவர்கள். ''நிலவே உனைப்பாட நேரமில்லை'' என்று பாடிய இவருக்கு நல்ல கவிதைகளைப் பாடவும் நேரமில்லாமல் போனது துரதிர்ஷ்டமே.

இவர்களைப்போல அரசியல் ரீதியில் தம்மை இனம் காட்டிக்கொள்ளாமல் சீர்திருத்தம், காதல், இயற்கை போன்றவற்றை உள்ளடக்கமாகக் கொண்டு கவிதை எழுதியவர்களாக திமிலைத்துமிலன், திமிலைக்கண்ணன், வெல்லவூர்க்கோபால், சி. கனகசூரியம், ஜீவா – ஜீவரெத்தினம், செ. குணரெத்தினம் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

மொழி உணர்ச்சிக் கவிஞர்களும் சரி, முற்போக்குக் கவிஞர்களும்சரி, சீர்திருத்தம், காதல், இயற்கை போன்றவற்றைப் பாடிய கவிஞர்களும்சரி இவர்களுடைய உள்ளடக்கம் மாறுபட்டாலும் ஓசையை அடிப்படையாகக் கொண்ட செய்யுள் ஊடகத்திலேயே எழுதினார்கள்.

1970ம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கைத் தமிழ்க் கவிதைத் துறையில் தோன்றிய புதிய வீச்சு மட்டக்களப்பிலும் பிரதிபலித்தது. நவீன தமிழ்க் கவிதையின் ஒரு பிரிவான புதுக்கவிதை இங்கு அறிமுகமாகிறது. செய்யுள் ஊடகத்தை வசன ஊடகம் கைப்பற்றுகிறது. செய்யுள் ஊடகத்தின் அகவல், செப்பல், துள்ளல், துலங்கல் ஆகிய ஓசை வகைகளின் இடத்தைப் பேச்சோசை கைப்பற்றிக்கொண்டது. பேச்சோசையைச் செய்யுளுக்குக் கொண்டு

வர மகாகவி, நுஃமான், சண்முகம் சிவலிங்கம் போன்றோர் மேற்கொண்ட முயற்சிகளைப்போல மட்டக்களப்பில் எதுவும் நடைபெறவில்லை.

இந்தக் கட்டத்தில்தான் சாருமதி அவர்கள் புரட்சிகர உள்ளடக்கத்தையும், வசன ஊடகத்தையும் கொண்ட புதுக்கவிதையை மட்டக்களப்பிற்கு அறிமுகம் செய்துவைக்கிறார். ''எமது கவிதைகள் முதன்மையாகப் புதிய வடிவங்களில் எழுதப்படவேண்டும். சில கவிதைகளை நாம் மரபு வழிபட்ட தொல்வடிவங்களிலும் எழுதலாம். ஆனால் அவ்வாறு செய்யுமாறு இளைஞர்களை ஊக்குவிப்பது முறையற்றது. ஏனெனில் இப்பழைய வடிவங்கள் அவர்களது சிந்தனையைக் கட்டுப்படுத்தும். மேலும் அவற்றைக் கற்றுத் தேர்வதும் கடினம்'' என்று மாஓ கூறியது சீனக்கவிதையைப்போல தமிழ்க் கவிதைக்கும் பொருந்தும். புதுக்கவிதை வடிவத்தையும் புரட்சிகர உள்ளடக்கத்தையும் மட்டக்களப்புக்கு அறிமுகப்படுத்திய சாருமதி அவர்கள் புரட்சிகர உள்ளடக்கத்திற்குக் கொடுத்த முக்கியத்துவத்தைக் கலைவடிவத்திற்குக் கொடுக்கத் தவறிவிட்டார். கலை மூலப்பிரமாணமும் அரசியல் மூலப்பிரமாணமும் ஒரு படைப்புக்கு அவசியம் என்பது அவர் அறியாததல்ல. அண்மைக்காலக் கவிதைகளில் கலைமூலப் பிரமாணத்தில் கவனம் செலுத்திவருகிறார்.


சாருமதியைத் தொடர்ந்து புதுக் கவிதை எழுதத்தொடங்கிய ஏராளமானவர்களைக் காண்கிறோம். ஏறையூர் யூசுப், அனலக்தர், ஓட்டமாவடி அரபாத், ஓட்டமாவடி இஸ்மாயில், வாழைச்சேனை அமர், வ ழை ம தி, ரீ. எல். ஜஃபர்கான் முதலியோரைக் கூறலாம்.

மட்டக்களப்பின் இன்றைய இளைய தலைமுறைக் கவிஞர்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர்கள் வாசுதேவன், எம். எல். எம். அன்ஸார், என். ஆத்மா ஆகிய மூவருமே. இன்றைய வாழ்வின் நெருக்குதல்களைக் கலாபூர்வமான கவிதைகளாக வடித்துத் தந்திருப்பவர் வாசுதேவன். மிகை யதார்த்தப்பாங்கான அற்புதமான படிமங்களைக் கையாண்டு உருவமும் உள்ளடக்கமும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கும் அற்புதமான கவிதைகளைத் தந்தவர்கள் என். ஆத்மாவும், எம்.எல். எம். அன்சாரும் ஆவர். ●

## 'றினோல்ட்' என்பது என்ன?

'றினோல்ட்' என்பது மெக்சிக்கோ நகரிலுள்ள ஒருவரின் பெயர். போல்பெயின்ட் பேனாவை முதன்முதலில் கண்டுபிடித்தவர் இவரே. றினோல்ட் என்னும் பெயரில் போல்பொயின்ட் பேனா ஒன்று புழக்கத்திலிருக்கிறதல்லவா? அவரின் கண்டுபிடிப்பு என்பதற்காகத்தான் அந்தப் பெயரில் அது புழக்கத்திலுள்ளது.

அழகிற் சிறந்த பவுண் தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்




நம்பிக்கை, நாணயம், நேர்மை
இன்றே நாடுங்கள்

# அருணா ஜுவலரி

இல. 32, பிரதான வீதி,
மட்டக்களப்பு.

ஓடர் நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன்
செய்து தரப்படும்.



தங்க நகை உலகின் வானம்!

◁ நேர்த்தியான டிசைன்கள்
◁ வசீகரமான வடிவமைப்பு
◁ கைதேர்ந்த தொழில்நுட்பம்
◁ அனுபவமிக்க நிபுணர்களின் வேலைப்பாடு

இவற்றுடன்
மாற்றுக்குறையாத 22 கரட் தங்க நகைகளைத்
தரமுடன் அளிப்பவர்கள்.

# கணேஷா ஜுவலர்ஸ்

இல. 45, மெயின் வீதி,
மட்டக்களப்பு.

தொலைபேசி: 065 - 2714.

# ஈழத்து இன்றைய இலக்கிய வளர்ச்சியில் மட்டக்களப்பு எழுத்தாளர்களின் பங்கு

● செ. யோகராசா.

ஈழத்து இன்றைய இலக்கிய வளர்ச்சியில் மட்டக்களப்பு எழுத்தாளர்களின் பங்குபற்றி அவதானிப்பதற்கு முன் இது தொடர்பான இரு விடயங்களைத் தெளிவுபடுத்தவேண்டும். (i) மட்டக்களப்பு என்று இங்கு கருதப்படுவது தற்போதுள்ள நிர்வாகப்பகுதியை உள்ளடக்கிய பிரதேசமாகும். (ii) இன்றைய இலக்கியம் என்கின்றபோது நவீன இலக்கியம் - குறிப்பாக, நாவல், சிறுகதை என்பனவே கவனத்திற் கொள்ளப்படுகின்றன. (இம் மலரிலே கவிதை பற்றிய கட்டுரையொன்று இடம்பெறுவதனால் கவிதை இங்கு தவிர்க்கப்பட்டுள்ளது).

தவிர, மட்டக்களப்பு நவீன இலக்கியம்பற்றி ஆய்வு செய்யுமொருவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டவேண்டும். (அ) மட்டக்களப்பு எழுத்தாளர் பலரது சிறுகதைகளும் நாவல்களும் நூல் வடிவில் வெளிவராமல் அவை வெளியான பத்திரிகைகளில் உறங்கிக்கிடக்கின்றன. (ஆ) மட்டக்களப்பு எழுத்தாளர்பற்றிய - அவரது படைப்புகள் பற்றிய விவரங்கள் குறிப்பாக எழுபதுகளுக்குப் பின் திரட்டப்படவில்லை. எனவே, மட்டக்களப்பு நவீன இலங்கிய வளர்ச்சி பற்றிய காத்திரமான ஆய்வில் ஈடுபடுவதென்பது மிகச் சிரமமான பணியாகின்றது. இத்தகைய ஆரோக்கியமற்ற நிலையினாலும், பக்க வரையறை காரணமாகவும் இங்கு சுருக்கமாகவே இவ்விடயம்பற்றிக் கவனிக்கப்படுகிறது. அதுவும், ஈழத்தின் சமகால நவீன இலக்கிய வளர்ச்சியின் முக்கிய போக்குகளை இனங்கண்டு அவற்றினை அடிப்படையாகக்கொண்டு மட்டக்களப்பு எழுத்தாளரின் பங்களிப்புப்பற்றி நோக்குவதாகவே அமைகிறது.

ஈழத்தின் இன்றைய நவீன இலக்கிய வளர்ச்சி பற்றி அவதானிக்கும் போது மூன்று முக்கிய போக்குகள் முதன்மைபெறுகின்றன. (i) தமிழ்த் தேசிய வாதம் (ii) பெண்நிலை வாதம் (iii) புகலிட அனுபவங்கள். இம்மூன்று போக்குகளும் மட்டக்களப்பில் வெளியான சிறுகதை, நாவல் படைப்புகளில் எவ்வளவு தூரம் வெளிப்படுகின்றன?

தமிழ்த் தேசிய வாதம் என்ற தொடர் பரந்த பொருளில் கையாளப்படுகிறது. சுருங்கக்கூறின் விடுதலைப் போராட்டம், போராட்டத்தின் விளைவுகள் முதலான அம்சங்கள் இதில் அடங்குகின்றன. இவ்விதத்தில் சிறுகதையைப் பொறுத்தவரையில் **எஸ். எல். எம். ஹனிபா, மட்டுநகர் முத்தழகு, மண்டூர் அசோகா** ஆகியோர் நினைவுக்கு வருகின்றனர். ஹனிபாவின் சிறுகதைகளுள் 'மருமக்கள் தாயம்', 'கட்டிப் போட்ட கால்கள்' ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்கவை; தொண்ணூறுகளுக்குப் பிற்பட்ட போராட்ட காலச் சூழலைக் கலைத்துவமாகப் படம்பிடிப்பவை, மட்டுநகர் முத்தழகு எழுதிய 'தாகமாயிருக்கிறேன்' என்ற சிறுகதையும் மேற்கூறிய சூழலை மனக்கண்ணில் நிறுத்தும் சிறந்ததொரு படைப்பாகிறது. பைபிள் நிகழ்ச்சியொன்றை இன்றைய அவலங்களுடன் இணைத்துப் பின்னப்பட்ட இப்படைப்பு மட்டுநகர் முத்தழகினை முதிர்ந்த எழுத்தாளராக இனங்காட்டுகிறது. மண்டூர் அசோகாவின் 'பனிமழையைத் தேடும் பாலைவனப் புஷ்பங்கள்' வெளிநாடு சென்று லீவிலே வந்த இளைஞனொருவனது பார்வையினூடாக அழிவுக்குள்

ளான கிராமம் ஒன்றினையும், அவ் விளைஞனது மனப் போராட்டங்களை யும் வெளிப்படுத்துகிறது. இவ்விடத் தில் போராட்டச் சூழலை வைத்துத் துணிவான பல சிறுகதைகளை எழுதிய திருகோணமலையைச் சேர்ந்த இளம் எழுத்தாளர் **சித்ரா நாகநாதன்** நினை வுக்கு வருவது தவிர்க்கவியலாதது.

நாவலைப் பொறுத்தவரையில், போராட்ட விளைவுகள் மூன்று நாவல் களில் ஓரளவு இடம்பெறுகின்றன; **திமிலை மகாலிங்கத்தின்** 'பொன் குஞ்சு கள்', 'பாதை மாறுகிறது', **மண்டூர் அசோகாவின்** 'பாதை மாறிய பயணங் கள்' ஆகியவற்றில் சமகாலச் சம்ப வங்களில் ஒன்றாக - சுருக்கமாக - இடம் பெறுகின்றன. அவ்வளவே. (திருகோண மலையைச் சேர்ந்த ஆலங்கேணி கிரா மத்தின் அழிவு, பிரபல எழுத்தாள ரான வ. அ. இராசரத்தினம் அவர் களைப் புதுமையான ஒரு நூலை எழு தத் தூண்டி, இறுதியில் 30 ஆண்டு களுக்கு முற்பட்ட ஆலங்கேணி கிராமம் பற்றி எழுதவைத்துள்ளது.)

இனி, பெண்நிலை வாதம் தொடர் பான படைப்புகள்பற்றிக் கவனிக்கும் போது **மண்டூர் அசோகாவின்** சில சிறு கதைகள் நினைவுக்கு வருகின்றன. பெரும்பாலும் சீதனப் பிரச்சினையைக் கருவாகக்கொண்ட கதைகள் ஒருசில வற்றில் பெண்களின் எதிர்ப்புக்குர லைக் கேட்கமுடிகின்றது. 'எங்களா லும் முடியும்' இவ்விதத்தில் குறிப்பிடத் தக்க படைப்பு. ஓரிடத்தில் நித்தியா கணவனைப் பார்த்துக் கேட்கிறாள்.

> ''அதைத்தான் கேட்க வந்தனான். ரெண்டுபேரும் சமமாகச் சம்பளம் எடுக்கிறம். உங்கட தங்கச்சிக் கெண்டு வாற நேரத்தில ஏன் கையை விரிக்கவேணும்? அவளுக்குச் செய்ததில அரைவாசி வேணாம். கால்வாசியாவது செய்ய ஏலாதா?''

இன்னொரு கட்டத்தில் தங்கைக்குக் கூறுகிறாள்:

> ''ஆர் தடுத்தாலும் இந்தக் கலியா ணம் நடந்துதான் ஆகவேணும். இதால எனக்கு என்ன நட்டம் ஏற் பட்டாலும் பாதகமில்ல... எங்க ளுக்கும் தைரியமிருக்கெண்டதைக் காட்டவேணும்...''

(மண்டூர் அசோகாவின் படைப்புகள் சிறுகதைகளா கதைகளா என்பதோ, பிரச்சினைகள் ஆழமாக அணுகப்பட் டனவா அணுகப்படவில்லையா என் பதோ, கலைத்துவம் கொண்டனவா இல்லையா என்பதோ வேறு விடயம்). அதேவேளையில் 'பாதை மாறிய பய ணங்கள்' நாவலில் வரும் நித்தியாவின் குரல் வலுவில்லாதது!

புகலிட அனுபவங்கள், குறிப்பாக எண்பதுகளின் பின் ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா முதலான நாடுகளில் வாழ்கின்ற எழுத்தாளர்களது படைப் புகளூடே வெளிப்படுவனவாகும். இவ் விதத்தில் என்பார்வைக் கெட்டியவரை யில் மட்டக்களப்பு எழுத்தாளர்களுள் இருவரே தெரியவருகின்றனர். ஒருவர் **எஸ் பொ.**, மற்றொருவர் **கல்லாறு சதீஷ்**. எஸ். பொ., ADIEU என்ற தலைப் புடைய சிறுகதை ஒன்றினை எழுதி யுள்ளார். இது புலம்பெயர்ந்து வாழ் கின்ற பலரது தற்காலப் போக்குகளை எண்ணி மனக்கசப்புடன் ஒரு பாத்திரம் பேசுவதாக அமைகின்றது.

இதுவரை ஈழத்தின் சமகால முக் கிய போக்குகளை அடிப்படையாகக் கொண்டு மட்டக்களப்பு எழுத்தாளர் களின் பங்கு பற்றி ஓரளவு நோக்கும் போது மட்டக்களப்பு எழுத்தாளர் களின் பங்கு போதுமானதல்ல என்ற முடிவுக்கு ஒருவர் வரக்கூடும். அது உண்மைதான்! அதற்கான காரணங் கள் விரிவான ஆய்விற்குரியவை. அதே வேளையில் ஈழத்தின் பிற பிரதேச எழுத்தாளர்களின் பங்கு எத்தகையது? எண்ணிக்கை ரீதியில் அவர்களின் பல படைப்புகள் வெளிவரக்கூடும். அவற் றுள் கவிதை தவிர நாவல், சிறுகதை படைப்புகளுள் எவ்வளவோ தேறக் கூடியன? கவனிப்பிற்குரிய படைப் பாளிகள் எத்தனை பேர்? என்று சிந் திக்கும்போது மட்டக்களப்பு எழுத் தாளர் அவ்வளவு தூரம் விசனிக்க வேண்டியதில்லை!



# புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை என்ற பெருங்கம்பன்

இலங்கை மணித் திருநாடு காலத் துக்குக் காலம் தமிழ் அறிஞர்களையும் புலவர்களையும் பெற்றெடுத்துத் தமிழ் அன்னையைச் சீரும் சிறப்பும் பெறச் செய்தது. அவ்வாறு தோன்றிய அருந் தவ தமிழ் அறிஞர்களுள் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை பல வகைகளில் முக்கியம் வாய்ந்தவர்.

தமிழின் பண்டைய வழக்கு முறை களையும், கூத்து முறைகளையும் பாதுகாத்துவரும் பிரதேசம் கிழக்கிலங் கையாகும். கிழக்கிலங்கையிலுள்ள சிறப்புமிக்க முருகன் திருப்பதிகளில் மண்டூர் ஒன்றாகும். மட்டக்களப்பு வாவிக்கரையிலே மருதமும் முல்லை யும் ஒருங்கிணைந்து அழகு செய்யும் ஊர் மண்டூர். இந்த ஊரிலேதான் புல வர்மணி அவர்கள் 1898ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08ம் திகதி பிறந்தார்.

இவரது தந்தையார் பெயர் ஏகாம் பரம்பிள்ளை. மண்டூர் முருகன் திருப் பதியின் வண்ணக்கராக முப்பது ஆண்டு கள் பணியாற்றியவர். தாயார் பெயர் சின்னத்தங்கம், சிறந்த இல்லறக் கிழத் தியாகத் திகழ்ந்தார்.

ஏகாம்பரப்பிள்ளை தனது மகன் ஆங்கிலம் கற்கவேண்டுமென விழைந் தார். அவரைக் கல்முனையிலுள்ள லீஸ் உயர்நிலைப் பாடசாலையில் சேர்த்தார். இந்த உயர்நிலைப் பாட சாலையிலேதான் விபுலானந்த அடிக ளும் கல்வி கற்றார். விபுலானந்த அடி களின் ஆசிரியராக இருந்தவர் குஞ்சித் தம்பி ஆசிரியர். இவரே புலவர்மணி யின் மதிப்புக்குரிய குருவாகவும் அமைந்தார்.

யாழ்ப்பாணத்தில் நாவலர் மேற் கொண்ட நற்பணியின் பயனாகத் தமிழ் கற்பதில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. நாவலர் பாடசாலை தமிழ்க் கல்விக்குச் சிறப்பான பணி யாற்றியது. 1917ம் ஆண்டு விஜயதசமி அன்று புலவர்மணி நாவலர் பாடசாலை யிலே சேர்ந்தார். இந்தப் புதிய சூழல் புலவர்மணியின் தமிழ் அறிவை விருத்தி செய்ய உதவியது.

யாழ்ப்பாணத்தில் குமாரசுவாமிப் புலவரிடம் மாணவனாக அமர்ந்து கற் கும் வாய்ப்புக்களும் கிடைத்தது. அல் லாமலும் மானிப்பாய் இந்துக் கல்லூரி

செழியன் ஜே. பேரின்பநாயகம்

அதிபராக இருந்த விபுலானந்த அடிகளாரோடு (அப்போது மயில்வாகனன்) பழகும் நல்ல வாய்ப்பும் கிட்டியது. இப்படியான அறிஞர்களின் தொடர்பும், யாழ்ப்பாணத்தில் அப்போது நிலவிய சமுதாய எழுச்சியும் புலவர்மணியின் எதிர்கால வாழ்வுக்கு வழிகாட்டிகளாக அமைந்தன.

புலவர்மணியின் சிந்தனையிலே எழுந்த விழிப்புணர்ச்சியை அவரின் வேலைகளிலே இனிது காணலாம். எதையும் உயர்ந்த உள்ளத்தோடு நோக்கினார். எதிலும் அழகையே கண்டார். எவரிலும் சிறந்த பண்பையே பார்த்தார். உள்ளம் உவந்து அவர்களுக்கு உதவிசெய்ய முன்வந்தார்.

இவரின் சிறந்த பண்புகளையும் வியக்கத்தக்க புலமையையும் கண்ட விபுலானந்த அடிகள் அவரைப் பாராட்டிப் போற்றினார். திருகோணமலை இந்துக் கல்லூரியில் ஆசிரியராக நியமித்து மதிப்பு அளித்தார். திருகோணமலையில் விபுலானந்த அடிகளும், புலவர்மணியும் ஒன்றிணைந்து கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தார்கள். புலவர்மணி இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி விபுலானந்த அடிகளின் மாணவராகிப் பாடல் கேட்டு அறிவை வளர்த்துத் தமிழ் அறிஞராக விளங்கினார். இதனைப் 'பகலிற் பண்டிதனாகவும், இரவில் மாணவனாகவும் இருந்தேன்' என்ற புலவர்மணி அவர்கள் குறிப்பீட்டை இங்கு எடுத்துரைப்பது சாலப் பொருந்தும்.

விபுலானந்த அடிகள் கிழக்கிலங்கையில் இராமகிருஷ்ண சங்கத்தினூடாகக் கல்விப் பணிகள் புரிந்தார். கல்வி நிலையங்களை அமைத்தார். பொறுப்பேற்றும் நடாத்தினார். பல நன்மாணாக்கர்களையும் உருவாக்கினார். அந்தப் பணிகளுக்கு அடிகளாரோடு தோளோடு தோள் கொடுத்தார்.

கிராமங்கள் தோறும் சென்று சொற்பொழிவுகள் செய்தார். தமிழை வளர்க்கவும், தமிழ் மக்களுக்குத் தேசிய உணர்ச்சியை ஊட்டவும் புலவர்மணி மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டப்படவேண்டியன.

புலவர்மணி குருக்கள்மடத்திலே குமரப்பெருமான் உடையாரின் பரம்பரையில் மூத்த தம்பி அவர்களின் மகளான நல்லம்மா என்பவரைத் திருமணம் செய்தார். நல்லம்மா பெயருக்கேற்ப புலவர்மணியின் துணைவியானார். அவர் மேற்கொண்ட நற்தமிழ் பணிக்கு உதவியாக வாழ்ந்தார்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது இலங்கையில் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அப்போது அரசாங்கம் உணவு உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தியது. பிரபல கல்விமானும், சிந்தனையாளருமான எஸ். எம். ஏ. அஸீஸ் அவர்கள் கல்முனையில் உதவி அரசாங்க அதிபராகப் பதவி ஏற்று உணவு உற்பத்திக்குப் பெரிதும் உழைத்தார்கள். அஸீஸ் அவர்களின் பெருமுயற்சியால் கல்முனைப் பகுதியெங்கும் உணவு உற்பத்தி பெரும் வெற்றியளித்தது. இவ்வெற்றி விழா பொருட்காட்சி மூலமும் கொண்டாடப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்திலே புலவர்மணி இரு பாட்டுக்களைப் பாடினார். அவை அழியாத செல்வங்களாக அமைந்தன.

ஒரு சிறந்த ஆசிரியனாக, சீர்திருத்தவாதியாக, சொற்பொழிவாளனாக, கவிஞனாக, கட்டுரை ஆசிரியனாக, பிறருக்காகப் பரிந்துபேசும் மனிதத்துவவாதியாக, தனக்காக எதையுமே விரும்பாத, பொதுநலவாதியாகப் பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் வாழ்ந்து நாட்டுக்கு ஆற்றிய பணிகள் இச் சந்ததியினருக்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

# என்னுடைய சவப்பெட்டி

நாலைந்து மாதமாய் நான் செத்தேன்...
பாருங்கள் போய்
ஆசிரியர் வரவு இடாப்பில்
என் பூதவுடல் இருக்கிறது.
'உத்தியோகம் புருச லெட்சணம்'
என்ற மலர் வளையம் சாத்தி
'ஆயிரம் இருந்தாலும் அரசாங்க வேலை'
எனும் மாலைகள் அணிந்து
'கடமை தவறா நல்லாசான்'
எனும் பூக்கள் தூவி
'மாப்பிள்ளை' என்ற வாசம் கமழ
என் பூதவுடல் இருக்கிறது.

பள்ளி நான் செல்லுகையில் எதிர்கொள்ளும்
பூக்குடிச்சான் குருவியினை
மைனாவை ஆலாவை மாங்கனியை
தெருநாயை அணிற்குஞ்சை சேவலினை
காணுகையில் எந்தனுக்கு உயிர் சுருங்கும்.

தன் இணைக்கு பேன் பார்க்கும் காக்கைமீதும்
குரைத்துவிட்டுச் சுருளுகிற நாயின் மீதும்
பின் இரவின் பனிக்குளிரில்
இரைமீட்கும் மாட்டின் மீதும்
பொறாமை மிகக் கொள்ளுகிறேன்
இந்தத் தொழில் கிடைத்த நாள்முதலாய்

கேட்டதையே சொல்லி
சொன்னதையும் சொல்லிச் சொல்லி
பட்டுப்போகிறதென் பகற்பொழுது......
நாட்டங்கொண்டபடி
நாலு திசை அலைந்தால்
பால் ஊறும் எனக்கு

ஆம்,
எங்கோ ஒரு பெரும் தவறு நிகழ்ந்துளது

'வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையாய்' வாழ்வதனை வெறுக்கிறேன்
இந்த ஊர் துப்பட்டும் என்மீது
உயிருடன் திரிய வேண்டும் நான்!

வாசுதேவன்.

"A GOLDEN BUD BLOOMS ON THE SAVINGS SCENE" Ran Kekulu A CHILDREN'S SAVINGS SCHEME FROM BANK OF CEYLON Bank of Ceylon Bankers to the Nation

"A GOLDEN BUD
BLOOMS ON THE
SAVINGS SCENE"

# Ran Kekulu

A CHILDREN'S
SAVINGS SCHEME
FROM
BANK OF CEYLON

**Bank of Ceylon**

Bankers to the Nation

# மட்டக்களப்புத் தமிழகத்தில் முஸ்லிம்கள்

எம். எம். எம். மஹ்றூப் கரீம்.

இலங்கை வரலாற்றிற் குளம் தொட்டு வளம் பெருக்கிய சிங்கள மன்னர்கள் காலத்திலிருந்தே அரேபியர்களுக்கும் அவர்களின் வழிவந்த அரேபிய முஸ்லிம்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததைப் பல சரித்திரச் சான்றுகள் வாயிலாக அறியமுடிகின்றது. முஸ்லிம்கள் மரக்கலத்தில் வந்தவர்களாதலால் சிங்களமொழியில் ''மரக்கலயா'' என்ற பெயராலும், தமிழில் சோனகர்கள், யோனகர்கள், துலுக்கர்கள் என்னும் பெயராலும், இப்பகுதியில் வாழ்ந்த முற்குகர்களால் ''பட்டாணியர்கள்'' என்ற பெயராலும் அழைக்கப்பட்டனர்.

''சிங்கள இலங்கை சோனகர்களின் நல்லுறவு இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுகளாக கி. மு. 6ம் நூற்றாண்டில் இலங்கைச் சோனகர்களின் மூதாதையர்களான சேபிய அராபியர்களும், ப்னிஷிய அராபியர்களும் வர்த்தகர்களாக வந்த காலம் தொட்டு நீடிக்கின்றது. காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள்... ''சிங்களவர்களாகிய நாம் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்துள்ளோமோ அத்தனை ஆண்டுகள் இலங்கையில் சோனகர்களும் இந்நாட்டில் வாழ்ந்துள்ளார்கள்...'' என்று கூறியுள்ளார்.

சேர். எமர்சன் டெனன்டின் கோட்பாட்டை ஆதரித்துக் கலாநிதி பாலேந்திரா அவர்கள் ''இலங்கைச் சோனகர்கள் இந்நாட்டின் பூர்வீகக் குடிகள் என்று கூறுகிறார்கள்...'' (தகவல்: பதிவாளர் நாயகம் எம். ஸட். எம். பாரூக், மூதூர் முற்போக்கு வாலிபமன்ற கர்பலா இஸ்லாமிய கலை விழா மலர் ப. 18).

''...இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம்களைப் போர்த்துக்கேயர் 'மூஅர்' என அழைத்தனர். புராதன இந்தியாவில் அந்நிய மக்களைச் சிறப்பாக அராபியர்களையும், கிரேக்கரையும் 'யவனர்' என்றே அழைத்தனர். இச்சொல்லிடையாகப் பிறந்தது 'சோனகர்' என்ற சொல்லாகும். இலங்கையில் குடியேறிய சோனகர்கள் அராபியர்களின் வழித்தோன்றல்களே. 8ம் நூற்றாண்டின் முற்கூற்றிலே அராபு மக்கள் இலங்கையிற் கூடுதலாகக் குடியேறினர் என்பது சேர். அலெக்ஸ்சாண்டர் என்பவரின் கருத்தாகும். 8ம் நூற்றாண்டில் அரசோச்சிய ஹாஷிம் கிளையைச் சேர்ந்த கலிபா அப்துல் மாலிக் மேமர்வான் காலத்தில் அவரது கொடுங்கோலாட்சியினால் அரபு நாட்டிலிருந்து வெளியேறியவர்களும், துரத்தப்பட்டவர்களும் கொங்கணத்திலும், தென்னிந்தியாவிலும், மலாக்காவிலும் அன்று அரேபிய முஸ்லிம்கள் வாழ்ந்தார்கள். சம்பான், சம்மான் என்ற படகில் வர்த்தகத்திற்காக வந்த முஸ்லிம்கள் வாழ்ந்துவந்த இடமே சம்மாந்துறை என்று அழைக்கப்படுகின்றது. துறைநீலாவணையில் அன்று வாழ்ந்த முஸ்லிம்கள் நெசவுத்தொழிலின் ஈடுபாட்டிற்கும், பயிற்சிக்குமாகப் படிப்படியாக மணற்பாங்கான பகுதியை நோக்கிக் குடியேறிய இடமே மருதநிலமாகிய மருதமுனையாகும். இதே

போல் இப்பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் துறைநீலாவணைக்குக் குடியேறியதாக அறிகிறோம். (தகவல்: ஈழத்து இஸ்லாமிய இலக்கிய ஆய்வாளர் ஜனாப். ஜே. எம். அப்துல்காதர் அவர்கள், சென்னை இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டிற்கு அனுப்பிய கட்டுரையிலிருந்து.)

ஆகவே போர்த்துக்கேயராலே துன்புறுத்தப்பட்ட முஸ்லிம்கள் ''செனரதனால்'' (கி. பி. 1605–1635) இலங்கையின் கிழக்குப்பகுதிக்குக் குடியேற்றுவதற்கு முன்னேயே சம்மாந்துறை, மருதமுனை, காத்தான்குடி, மூதூர் முதலிய பகுதிகளில் முஸ்லிம்கள் வாழ்ந்தார்கள் என்பதை அறியக் கிடக்கிறது.

## ஊரும் பேரும் :

இலங்கையில் உள்ள முஸ்லிம்களில் இன்று மூன்றிலொரு பகுதியினர் செறிந்து வாழும் நெற்களஞ்சியமான கிழக்கு மாகாணத்தில் மேற்கூறிய இடங்களில் முதலில் அரேபிய முஸ்லிம்கள் வந்து வாழ்ந்த இடம் காத்தான்குடியாகும். மீன்பாடும் தேன்நாடாம் மட்டுமாநகரில் மங்காப் புகழ்பெற்று விளங்கும் காத்தான்குடி, இன்று ஈழத் திருநாட்டிலேயே முஸ்லிம்கள் பெரும்பான்மையாகத் தமது கலாசாரப் பண்பாடுகளைப் பேணி அரேபிய முஸ்லிம்களின் கலாச்சாரச்சாயலோடு வாழ்ந்து வரும் ஒரு பட்டினமாகும்.

இவ்வூர்ப்பூமி முதல் கொக்கட்டிச்சோலையை மையமாகக் கொண்டு விவசாயம் செய்து வாழ்ந்துவந்த முற்குகர்களின் தலைவனான 'காத்தான்' என்பவருக்குச் சொந்தமாயிருந்தது. காத்தான்குடியில் முதலாம், இரண்டாம் குறிச்சிப் பகுதியில் இவர் சேனை செய்த இடமே இன்றும் சேனத்தெரு என்று அழைக்கப்படுகின்றது. இச்சேனையைத்தான் ஊர் றோட்டில் முதல் பள்ளிவாயலாக அமைந்த சின்னப்பள்ளியடி என்ற இடத்தில் ஒரு குடிசை-பரண் அமைத்துப் பாதுகாத்து வந்தார்.

முற்குகர்களுக்கும், திமிலர்களுக்கும் இடையே அடிக்கடி சண்டை ஏற்பட்டுவந்தது. பிரதி வருடமும் காத்தான் தலைமையில் அறுவடையின் பின்னர் கொக்கட்டிச்சோலைக் கோவிலில் நடைபெறும் குடிமுறைத் திருவிழாவிற்கு மக்கள் செல்லும் சந்தர்ப்பத்தைப் பார்த்துத் திமிலர் இங்குவந்து பொருள்களையும், தானியங்களையும் கொள்ளையடித்ததோடு, பெண்களையும் சூறையாடிச் செல்வது வழக்கமாயிருந்தது. பட்டு, குதிரை முதலிய வியாபாரப் பொருட்களுடன் கிழக்குக் கடல்வழியே திருகோணமலைத் துறைமுகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த அரேபிய முஸ்லிம்களின் மரக்கலம் ஒன்று புயலால் அடிக்கப்பட்டு, மட்டக்களப்பு வாவியின் ஊடே சென்று சின்னப்பள்ளியடி என்ற இடத்தில் கரைதட்டியது. இங்கு இவர்களுக்கும், காத்தானுக்குமிடையே ஏற்பட்ட நட்பு இவர்களின் உதவியுடன் திமிலர்களைப் பனிச்சன்கேணிவரை விரட்டியடிக்க உதவியதாக ஒரு கர்ணபரம்பரைக் கதை கூறுகிறது. ''எதிரிகளை நாற்புறமும் துரத்திச்சென்ற படைகள் வெற்றிவாகையுடன் மகிழ்ச்சிப் பெருக்கால் மீண்டும் வந்து சந்தித்த இடமே சந்திவெளி என்றும், இவர்கள் வந்து இளைப்பாறிய இடம் 'வந்தாறுமூலை' என்றும் காரணப்பெயர்களால் அழைக்கப்படுகின்றது.'' (தகவல்-மட்டக்களப்புத் தமிழகம் பக். 393).

முற்குகர்களால் பட்டாணியர்கள் என்று அழைக்கப்படும் இவர்களின் வீரத்தையும், திறமையையும் கண்ட முற்குகர்களும், அவர்களின் தலைவன் காத்தான் என்பவரும் தமது குடிகளிலுள்ள சிறந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அழகிகளை மணந்துகொண்டு இங்கேயே வருமாறும், அதற்காக இந்நிலப்

பகுதியையே அன்பளிப்பாகக் கொடுப் பதாகவும், அப்போதுதான் தாம் பய மின்றி வாழலாம் என்றும் கேட்டுக் கொண்டனர்.

இதற்கேற்ப இவர்கள் அரண் போலப் பாதுகாத்துக் கொண்டு வாழ்ந்த இடமே பாதுகாத்தான் குடி யிருப்பு என்ற காத்தான்குடியாகும். இவர்களைப் பின்பற்றிவந்த முஸ்லிம் களைத் திமிலர்கள் மீண்டும் வந்து குடி யேறாது அரண்செய்யும் முகமாகக் குடி யேறிய ஊரே 'ஏறாவூராகும்'. இம் முஸ் லிம்கள் பட்டாணியர்களை எவ்வாறு முற்குகர்கள் மதித்தார்கள் என்பதற்கு இன்றும் இப்பகுதி தமிழ்க் கோவில் களில் மடை வைக்கும்போது பட்டாணி யர் மடை வைக்கப்படுவதும், சவக் குழி ஏலமிடும்போது, பல நாயன்மார் களுக்குப் போற்றிக் கூறிவிட்டு ஈற்றில் 'முக்குகர்களைக் காத்த பட்டாணியர் கள் போற்றி...' என்று முடிக்கப்படு வதும், இன்றும் வருடந்தோறும் கொக் கட்டிச்சோலைக் கோவிலில் நடை பெறும் குடிமுறைத் தேர்த்திருவிழா விற்கு முஸ்லிம் ஒருவரும் தேர்வடம் பிடித்து இழுப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இந்தியாவில் உருதுமொழி பேசுபவர் களையும் குறிக்கும். இந்தியாவில் எல் லைப்புற மாகாணம், ஆப்கானிஸ்தான் என்பனவற்றில் வாழ்ந்த மக்களைப் 'பட்டாணியர்கள்' என அழைப்ப துண்டு. எனவே இங்கிருந்து வந்தவர் களாக இருக்கலாமா என்றும் எண்ண முடிகிறது. (தகவல் – காத்தான்குடி முகைதீன் மெ. ப. வாயல் திறப்பு விழா சிறப்பு மலர், 7-09-73, தினபதி).

இப்பகுதி முஸ்லிம்களின் கலாச் சார–பண்பாடுகளுடன் கலந்த முற்குக, இந்திய (காயல்பட்டண), சம்பிர தாயங்களும், பழக்கவழக்கங்களும்: ...தாய்வழித் தொடர்பால் முற்குகர் களினதும், வியாபார, சமய, அறிஞர் கள், ஆலிம்கள் தொடர்பால் காயல் பட்டண முஸ்லிம்களினது சம்பிரதாயங் களும், பழக்கவழக்கங்களும் இப்பகுதி முஸ்லிம்களின் கலாச்சாரப் பண்பாட் டுடன் இரண்டறக் கலந்துவிட்டன. இப்பகுதியில் தமிழர்களும் முஸ்லிம் களும் முதுபெரும் புலவர் பெரியதம்பிப் பிள்ளை அவர்கள் கூறுவதுபோல,

''இருதயத்தின் ஈரிதழ்போல்
இந்து முஸல்மான்கள் ஒருவயிற்றுப்
பாலகராய் உற்றோம்...''

என்ற கருத்துப்படி இங்கு முஸ்லிம் களும், இந்துக்களும், கிறிஸ்தவர்களும் மதத்தால் வேறுபட்டாலும், மொழி யால் ஒன்றுபட்டவர்களாகப் பல சமூக பழக்கவழக்கங்களையும், பாரம்பரியங் களையும் கைக்கொள்பவர்களாக இருக் கின்றனர்.

## குடிமரபு:

ஏற்றத்தாழ்வான குலப்பிரிவுகள் முஸ்லிம்களிடத்தில் இல்லை. ஆனால் தொல்காப்பியர் காலத்துக்கு முற் பட்டே தமிழகத்தில் குடிமரபு இருந்த தாகக் கருதப்படுகின்றது. உயர்வு தாழ்வுகளைக் குறிக்காது அங்குள்ள கோயில் நிர்வாகங்களை; விழாக் களைத் திறன்பட நடாத்துவதற்கா கவே இக்குடிகள் பயன்பட்டதாக அறி கின்றோம். (மட்டக்களப்புத் தமிழகம் பக். 431). கிழக்கிலங்கையில் வேறு எங்குமில்லாது இக் காத்தான்குடியில் முற்றாகத் தாய்வழியையொட்டிய குடி முறைகள் இன்றும் இருக்கின்றன. எவ் வாறு கொக்கட்டிச்சோலைக் கோவி லில் குடிமுறையின்படி விழாக்களை நடாத்துகிறார்களோ அதேபோல் இங் கும் 18 குடிகளையும், 12 இரவுகளுக் காகப் பிரித்துக் காத்தான்குடியின் மிகப் பழமையான பெரிய மீராபள்ளி வாய லில் (இப்பள்ளியின் பழமைத் தன்மைக் கும், அரேபிய வருகைக்கும் சான்றாக நினைவுகூருமாப்போன்று பெரிய பேரீந்து மரமொன்று பள்ளிவாயலி னுள் நின்று புனர்நிர்மாணம் செய்யும் போது தறிக்கப்பட்டது குறிப்பிடத்

தக்கதாகும்.) 12 நாட்களுக்கு மௌலீது ஓதுவதுடன் நேர்சைகள் வழங்கும் முறையைப் புகுத்தியது காயல்பட்டண சம்பிரதாயமாகும்.

## திருமண சம்பிரதாயங்கள் :

முஸ்லிம் கலாச்சாரப்படி ஆணுக்குப் பெண்ணைவிட இருமடங்கு சொத்துக்கள் சேரவேண்டும். இவரே தமது மனைவிக்குரிய உணவு, உடை, உறையுள் கொடுக்கவேண்டும். ஆனால் இதற்கு நேர்மாற்றமாக முற்குகர்களில் ஆரியக் கலப்பற்ற தனித்தன்மையுடைய மணமுறையைப் பின்பற்றி இப்பகுதி முஸ்லிம்களாலும் ஆணைவிடப் பெண்ணிற்கே கூடிய சொத்துக்களும், சீதனமும், ஆதனமும், வழங்கப்படுகின்றது. மருமக்கட் தாய முறைப்படி பெண்ணிற்கே முதலிடமளிக்கப்படுகின்றது. ஆதனங்களைக்கூடப் பெண்ணடி முதிசமாக எழுதிவைக்கும் முறையுள்ளது. மேற்கூறிய பெண்ணடி முதிசமாக எழுதிவைக்கும் முறையும், தேங்காய் கலந்த உணவு உண்ணலும், தலைக்குத் தேங்காய் எண்ணை தேய்த்தலும், மங்கள நிகழ்ச்சிகளிற் குரவை இடுதலும் சேரநாட்டு மலயாளக்கரையிற் காணப்படும் கலாச்சாரங்களாகும். இது முற்குகர்களால் கைக்கொள்ளப்பட்டு (மட்டக்களப்புத் தமிழகம் பக். 8) இப்போது முஸ்லிம் சம்பிரதாயமாக மாறியிருக்கிறது.

இதைத்தவிரப் பெண்வீட்டார் மாப்பிள்ளை கேட்டுப் போதல், பின் மாப்பிள்ளை வீட்டார் வீடு, வளவு, பெண்பார்க்கப் போதல், வட்டாவைத்து (வெண்கலத்தாலான காலுள்ள வெற்றிலைத்தட்டம்) கௌரவப் பிரமுகர்களைக் கல்யாணத்திற்கு அழைக்கும் முறை, மருதாணி போடுதல், மருதாணி பிசகுதல், மைத்துனரால் மாப்பிள்ளையின் கால்களைத் தண்ணீர், பாலினால் கழுவுதல், மணமக்களுக்குப் பால், பழம் கொடுத்தல், தங்கமோதிரம் அணிவித்தல், தாலி கட்டுதல், ஆராத்தி எடுத்தல், கண்ணூறு கழித்தல், குரவை இடுதல், பெட்டி கொண்டுபோதல், கூறை கொடுத்துத் தண்ணீர் வார்த்தல், கால்மாறிப் போதல் முதலியனவெல்லாம் முற்குகக் கலாச்சாரத்திலிருந்து இப்பகுதி முஸ்லிம்களின் சம்பிரதாயமாகப் புகுந்ததாகும். இவற்றில் சில தற்போது படிப்படியாக மறைந்துவருகின்றன.

முற்குகத் திருமணக் கலாசாரப்படி முகூர்த்த நட்சத்திரம் பார்த்தல், ஆண் பெண் பொருத்த ஜாதகம் பார்த்தல், கலத்திற் போடுதல் என்பன முஸ்லிம் திருமணச் சம்பிரதாயங்களில் இடம் பெறவில்லை. ஜாதகம் பார்ப்பது முஸ்லிம் கலாச்சாரச் சட்டப்படி தடுக்கப்பட்டதாகும். மாறாக பிறைகணக்குப் பார்த்து 14, 17, 19, 21, 23, 27, 29 என்ற பிறைகளில் திருமணத்தை வைப்பதாக நிட்சயித்து 'வலிமா' விருந்து என்ற பெயரிற் பெண் வீட்டார் திருமணத்திற்காக அழைக்கப்பட்டவர்களுக்குச் சமபந்தி போஜனம் நடாத்துதலும், திருமணம் முடித்து 3 அல்லது 7-ல் மாப்பிள்ளை பார்த்தல் என்ற வைபவ விருந்தை நடாத்துதலும், மாப்பிள்ளை வீட்டார் திருமணத்திற்கு முன்னர் 'மௌலீது' ஓத விருந்து நடாத்துதலும், காயற்பட்டணச் சம்பிரதாயமாக இப்பகுதி முஸ்லிம்களால் பின்பற்றப்படுகின்றது.

மணமகன் தனது வசதிக்கேற்ப மணமகளுக்கு ரொக்கப்பணமாகக் கொடுக்கும் தொகை 'மஹர்' என்ற பெயரிற் கட்டாயம் செலுத்தப்படவேண்டும் என்பது முஸ்லிம் கலாசாரச் சட்டமாகும். திருமணம் முடித்து தண்ணீர் வார்க்கும் வைபவம் கூறை கொடுக்கும்வரை சம்பிரதாயபூர்வமாக நடைபெறாது. இக்காலம்வரை மணமகன் இரவு நேரங்களில் வெளியேறாது பகல் நேரங்களில் மைத்துனர் துணையுடன் நெருங்கிய உறவினர்களின் இல்லங்களுக்குச் செல்வது ஒரு சம்பிரதாய

மாக இங்குள்ள முஸ்லிம்களால் பின் பற்றப்படுகின்றது. திருமணம் முடித்து 6 மாதங்களுக்கு அல்லது குறிப்பிட்ட சில காலத்திற்கு மணமக்களுக்குச் சோறு கொடுத்தல் என்ற முற்குக கலாசார நிபந்தனைப் பழக்கம் இப்போது இங்குள்ள முஸ்லிம்களாற் பின் பற்றப்படாது அருகிவருகின்றது. ஆனால் இரு குடும்பமும் (மணமகள், அவரின் பெற்றோர்) ஒன்றாக இருக்கும் போது ஒருநாள் மணமகனும் மறுநாள் மணமகள் வீட்டாரும்) செலவு செய்யும் முறை முறைக்கறி வாங்கும் மரபாகப் பின்பற்றப்படுகின்றது.

## சுன்னத் (விருத்தசேதனம்) சடங்கு

முற்குகக் கலாச்சாரத்தில் பெண்கள் பக்குவப்படும்போது நடாத்துகின்ற சடங்கு வைபவம் அதேபோற் பிரசித்தமாக இப்பகுதி முஸ்லிம்களால் கைக்கொள்ளப்படவில்லை. ஆனால் ஆண் பிள்ளைகளின் விருத்தசேதன 'சுன்னத் வைபவம்' இதை ஈடுசெய்யுமாற் போன்று அச்சம்பிரதாயங்களைப் பின் பற்றி நடைபெறுகின்றது.

## குழந்தைப்பேறு

திருமணம் முடித்தபின் மணமகனுடன் சென்ற பெண் பிரசவத்திற்காக அன்னையில்லம் வரும் வழக்கம் இங்கில்லை. ஏனெனில் மணமகளுக்கே வீடு, சீதனம், ஆதனம் எல்லாம் கொடுக்கப் படுவதால் இவ்வீட்டிலேயே பிரசவம் நடக்கின்றது. ஆனால் தலைப் பிள்ளைக்குரிய பிரசவச் செலவுகள் பெண்ணின் பெற்றோர்களாலேயே செய்யப் படவேண்டுமென்ற சம்பிரதாயம் பின் பற்றப்படுகின்றது. முற்குகர்களின் முக்கிய சம்பிரதாயங்களில் ஒன்றான பிள்ளை பிறந்ததும் ஜாதகம் – சாஸ்திரம் பார்க்கும் பழக்கம் முஸ்லிம்களாற் பின்பற்றப்படவில்லை. தலைப் பிள்ளை கண்டபின்புதான் சீதனம், ஆதனம் மணமக்களுக்கு எழுதிக் கொடுக்கும் முறை இன்றும் பரவலாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது.

பிள்ளை பிறப்பதற்கு முதல் ஆலிம்களை (மார்க்கப் பண்டிதர்) அழைத்துப் பிரார்த்தனை செய்து விருந்து கொடுத்தலும், பிள்ளை பிறந்த மூன்று நாட்களுக்குள் 'மருங்கை துவா' என்ற பெயரில் பாதுகாப்புத் தடை போடலும், பிள்ளை பிறந்த நாற்பதாம் நாள் 'மௌலீது' ஓதி, விருந்து வைத்துப் பெயர் சூட்டலும். உறவினர்கள் வீட்டிற்கும்,குழந்தைகளுக்கும் ரொட்டி விநியோகித்தலும் காயற்பட்டண சம்பிரதாயமாக இப்பகுதி முஸ்லிம்களாற் பின்பற்றப்படுகின்றது. 60ம் நாள் பிள்ளையின் தலைமுடி இறக்கி அதன் நிறையளவு பொன்னின் பெறுமதிக்குத் தானதருமம் செய்தல் முஸ்லிம் கலாச்சாரங்களில் ஒன்றாகும்.

## ஆபரணங்கள்

முற்குகப் பெண்களின் அணிகலங்களான தண்டை (சிலம்பு), கொலுச்சம், முகப்பணி, சரி, தாவத்துக்கொடி, அல்லுக்குத்து, உக்கட்டு, சவுக்கமணி, மணிக்கோர்வை, கொண்டைப் பூ, கொண்டைமாலை, கரணை, பூவாளி, சிமிக்கிவாளி முதலிய அணிகலங்களை முஸ்லிம் பெண்களும், முற்குகப் பெண்களும் அணிந்துவரும் வழக்கம் இன்று அருகிவருகின்றது. என்றாலும் ஏனைய இனத்தவர்களை விடக் கூடுதலான தங்க நகைகள் அணிவதில் இவர்கள் முன்னணியில் நிற்கின்றனர்.

முற்குக ஆண்கள் கடுக்கண் அணிவதுபோல் முஸ்லிம் ஆண்கள் எந்தவித நகையும், தங்கமோதிரமும் அணியக் கூடாது என்பது முஸ்லிம் கலாச்சாரச் சட்டமாகும். ஆனால் முற்காலத்தில் பத்து வயதிற்குட்பட்ட ஆண்பிள்ளைகளுக்குக் காரை, மாலை, காப்பு முதலிய ஆபரணங்கள் அணிவித்ததாக அறிகின்றோம். இது முற்குகக் கலாசாரத்தின் பிரதிபிம்பமாக இருக்கலாம்.

**மரணச்சடங்கு**

ஒருவர் மரணம் அடைந்தபின் – விரைவாக அவரது உடலை அடக்கம் செய்யவேண்டும் என்பதும், சகலரும் வெண்மையுடையே அணியவேண்டும் என்பதும், மரணித்து ஏழு நாட்களுக்கு அவ்வீட்டில் அடுப்புப் பற்றவைக்கக் கூடாது என்ற நிபந்தனைக்கு மாற்ற மாக அடக்கம் செய்யப்பட்ட அன் றிரவே உறவினர்களுடன் மரண வீட் டிலேயே சமைத்து விருந்து படைத்து ஏழைகள், ஆலிம்கள், உறவினர்கள் உண்ணும் முற்குகக் கலாச்சாரத்தி லிருந்து வேறுபட்ட முஸ்லிம் கலாச் சாரங்களாகும். எவ்வளவு விரைவாக மரணமடைந்தது பற்றிய துக்கத்தை மறக்கவேண்டுமோ அவ்வளவு விரை வாக மறக்கவேண்டும் என்ற காரணத் திற்காக மேற்கூறிய கலாச்சாரங்கள் பின்பற்றப்பட்டிருக்கலாம் என அறிய முடிகிறது.

(இம்முறையும், மறுமணம் புரித லும், விதவைத் திருமணம் முதலியன வும் முஸ்லிம் காலாசாரத்திலிருந்து மற்றவர்களுக்குப் பரவியிருப்பதும் பர வலாகக் காணக்கூடியதாக இருக்கின் றது.) கணவனை இழந்த மனைவி நான்கு மாதங்கள் (இத்தா) என்ற ஒரு கட்டுப்பாட்டின் கீழ் தன்னைத் திரு மணஞ்செய்ய ஆகுமான ஆண்களின் தொடர்பின்றி இருக்கவேண்டும் என்ற கலாச்சாரம் கட்டாயம் கடைப்பிடிக் கப்பட்டுவருகின்றது. இது கணவனை இழந்த மனைவி துக்கத்தை அனுஷ் டிக்கவேண்டும் என்பதற்காக மாத்திர மல்ல, கணவனுக்குத் தொடர்பான குழந்தை சம்பந்தம் உண்டா என்று திட்டமாகப் பரிசீலித்து அறிவதற்காக வும் இக்காலம் தேவைப்படுகின்றது.

ஒருவர் மரணமாகி 1, 3, 7, 15, 30, 40, 100 ஆண்டு என்ற ஒழுங்கில் ஹத்தம் (இறை மறைவசனங்கள்) ஆலிம்களால் ஓதி அன்னதானம் கொடுத்து ஏழைகளுக்கும், உறவினர் களுக்கும் விருந்துபசாரம் நடாத்த வேண்டுமென்பது இந்திய முஸ்லிம் களால் இங்கு புகுத்தப்பட்ட கலாசார மாகும்.

முற்குகக் கலாசாரங்களால் எவ் வாறு எமது கலாசாரத்திலே மொழியில் மாற்றம் ஏற்பட்டதோ அதேபோன்று இந்த முஸ்லிம்களின் வர்த்தக உரிமை கள் பறிக்கப்பட்டு, மதம் மாறியவர் களுக்கே உத்தியோகமும் கௌரவமும் கொடுத்தும்கூட வியாபாரத்தை இழந் தாலும், கௌரவத்தை இழந்தாலும் மதத்தை இழக்காது கிழக்குமாகாணத் திற் குடியேறி வியாபாரத்தை விடுத்து விவசாயிகளாக மாறினர் என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும். (தக வல்: இலங்கையில் இஸ்லாம் – பக். 59).

தமிழ் இலக்கியத்தை வளம்பெறச் செய்த தமிழ்ப் புலவர்களில் முஸ்லிம் களும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். காப்பியம், கலம்பகம், ஆற்றுப்படை, அம்மானை, அந்தாதி, கிஸ்ஸா, கீர்த் தனை, ஏசல், சிந்து, கும்பி, மாலை, மஸ்அலா, நாமா, முனாஜாத், படைப்போர், பிள்ளைத்தமிழ், திருப் புகழ், புராணம் என்ற பல்வேறு துறை களிலும் தமது பங்கைத் தமிழ்த்தாய்க் குச் செலுத்தியுள்ளனர். இத்துறையில் மட்டக்களப்புத் தமிழகத்தில் முஸ்லிம் களும் முக்கிய இடத்தைப் பெறுகின் றனர்.

நன்றி: ஈழநாடு (16-5-1976)

LEADING WHOLESALE & RETAIL TEXTILE DEALERS

# THURJA TEXTILES

சாரி வகைகள், சேட்டிங், சூட்டிங்,
குழந்தைகளுக்கான தைக்கப்பட்ட ஆடைகள்,
டீ சேட்டுகள் மற்றும் நவீன உடைகள்
சகலதுக்கும் விஜயம் செய்யுங்கள்

# துர்ஜா டெக்ஸ்டைல்ஸ்

இல. 19, மத்திய வீதி,
மட்டக்களப்பு.

தொலைபேசி: 065 – 2669.

நவநாகரீகத்திற்கேற்ற

சகலவித புடவைத் தேவைகளுக்கும்

சிறந்த இடம்

## லக்கி எம்போரியம்

சேட்டிங், சூட்டிங், சாரம், கம்பாயம்,
பட்டிக் துணி வகைகள்,
கூறைச் சேலைகள்
நியாய விலையில் கிடைக்கும் இடம்

# லக்கி எம்போரியம்

மட்டக்களப்பு.

மட்டக்களப்பு நகரிலே

தத்ரூபமான புகைப்படங்களுக்கு

# லேக் ஸ்ரூடியோ

Undertaken :

**Photograpy, Developing, Printing, Enlarging, Colour Roll Processing, Photo Framing and also LAMINATING and COLOUR Photo works.**

— VISIT —

# STUDIO LAKE

No. 41, MUNAI STREET,

**BATTICALOA.**

Telephone : 065 - 2740.

★ *தினசரி தேவையான மலிகைப் பொருட்கள்*

★ *குளிர்பானங்கள்*

★ *கேக் ஸ்வீட்ஸ் செய்யும் பொருட்கள்*

மற்றும் சகல வீட்டுத் தேவைகளுக்கும்

*பிரபல்யம்வாய்ந்த இடம்*

## முருகேசு அன் பிரதர்ஸ்

★

# MURUGESU & BROS.

35, சென்றல் றோட்,
மட்டக்களப்பு.

35, CENTRAL ROAD,
**BATTICALOA.**

Telephone : 065 - 2534.

# சுற்றாடல் பாதுகாப்பும் மரம் நடுகையும்

மனோ. பேரின்பநாயகம்

தாவரங்களை உருவாக்குவதன் அவசியம் இன்று மக்களிடையே உணரப்பட்டுள்ளது. பல்வகை நன்மைகளை மையமாகக்கொண்டு தாவரங்கள் நடப்படுகின்றன. என்றாலும் சுற்றாடற் பாதுகாப்பைப் பற்றிய உணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி அதற்கு உறுதுணையாகப் பாடசாலைகள், சாலை ஓரங்கள், சந்திகள் போன்ற பகுதிகளில் மரநடுகையை மேற்கொள்ளுமாறு பல பொதுத் தாபனங்கள் கூறிவருகின்றன. அரசும் மரநடுகையை வலியுறுத்துகிறது.

சூழற் பாதுகாப்பு என்ற இலக்கை மையமாகக்கொண்ட நிலையில் தாவரங்களின் பயன்களை, அவை நின்ற நிலையில் மனிதனுக்கு ஆற்றும் சேவையை மதிப்பிடவேண்டும்.

இந்தியாவில் கல்கத்தாவிலுள்ள விவசாயப் பிரிவினர் தாவரங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டார்கள். முக்கியமாகத் தாவரங்கள் வளிமண்டலத்தில் கலந்துள்ள தூசுக் குவியல்களைத்தான் ஏற்றுக்கொண்டு வளியைச் சுத்தமாக்குவதாகக் கண்டுள்ளனர். சாலைகளில் வாகனங்களின் நடமாட்டத்தால் உருவாகும் தூசுகளிலிருந்து மனிதன் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு வீட்டு முற்றங்களில் தூசுகளைப் பற்றிப்பிடிக்கக்கூடிய மாமரம் போன்ற கனிமரத்தை நடலாம். இலைகளில் சொரசொரப்பான தன்மையுள்ள மரங்கள்தான் மிகப் பொருத்தமானவை. மாமரம், தேக்கு, வம்மி போன்றவை இத்தன்மையன.

நம்நாட்டில் உணவுப் பிரச்சினை உண்டு. சத்துள்ள உணவுகளை உட்கொள்ளும் மக்களின் தொகை குறைந்துவருகிறது. காரணம் வருமானம் குறைவு, உற்பத்தியும் குறைவு. இந்நிலையில் தாவரங்களை நடும்போது அவை கனிகளை வழங்கத்தக்கவையாக இருப்பின் மிகவும் விரும்பத்தக்கதல்லவா?

வெளிநாட்டு மரங்களான சவுக்கு, சுத்தாக்கு, அசோக், விக்ஸ் மரங்களை நடுவதை விடுத்து மா, பலா, வாழை, விளா, கொய்யா போன்ற கனிதரு மரங்களை நடுவதை ஊக்குவித்தால் பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் பெறமுடியும். ஒரு வாழை ஒரு குலையை ஈன்றால் அதனால் பலர் பயன் பெறலாம். பலாமரமும் பல நூறு பழங்களை வழங்குகிறதல்லவா?

1978ம் ஆண்டு கிழக்கிலங்கையில் ஏற்பட்ட பயங்கரச் சூறாவளி அனர்த்தங்களால் மா, பலா, புளி, விளா, பனை போன்ற கனிதரும் மரங்களும்; ஆல், அரசு, வேம்பு, வம்மி, பன்னிச்சை, மதுரை போன்ற நிழல்தரு மரங்களும் வேரோடு சாய்ந்தன. தென்னந் தோட்டங்களில் ஓங்கிநின்ற தெங்கின் அடியோ இல்லாமல் ஒழிந்தன. பொருளாதார வளத்தினை இப்பிரதேசத்திற்கு இம்மரங்கள் தந்தன என்பதில் சந்தேகமில்லை. இந்தியாவில் சாலை ஓரங்களில் புளிய மரங்களை நட்டு இருப்பதை இந்தியாவுக்குச் சென்றவர்கள் காணாமல் இருந்திருக்கமுடியாது.

வீட்டுத் தளபாடங்களைச் செய்வதற்குரிய, வீடு கட்டுவதற்குத் தேவையான மரவகைகளும், கிழக்கிலங்கையில் அழிந்துவிட்டன. சமுளை, தேக்கு, வேம்பு, முதிரை போன்ற உலர்வலயத் தாவரங்கள், கிராமங்களிலுள்ள வீட்டு வளவுகளில் சர்வசாதாரணமாக உருவாகுபவை. சவுக்கு போன்ற மரங்களை நடுவதைவிட பலவகைத் தேவைகளை நல்கக்கூடிய எமது பிரதேச காலநிலைக்கேற்ற தாவரங்களை நடுவது பயனுள்ள முயற்சியாக முடியுமல்லவா? கிராமங்களில் வதியும் ஏழைச்சிறார்களும் பயனுறும் வகையில் நாவல், மரமுந்திரிகை, விளா போன்ற கனிதரு மரங்களைத் தரிசு நிலங்களில் நடலாம். குறிப்பாக நாவற் பழம் அதிகம் இரும்புச்சத்து உள்ளதாக அறியப்படுகிறது.

ஜனசக்தித் திட்டம் செயல்படுத்தப்படும் இவ்வேளையில் பழமரங்களை நடுவது மக்களுக்குச் சக்தியூட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் ஏற்பாடாகவும் கருதலாம். பாடசாலைகளில் மா, பலா, வாழை போன்ற பழமரங்களை நடுவதால் நிழலும் தரும். நெருக்கமான வகுப்பறைகளில் உரத்து வாசித்தல், பாட்டுப் பாடுதல் போன்ற பயிற்சிகளை வழங்குவது சிரமம். இத்தகைய மர நிழல்கள் குளிர்ச்சியான சூழலை உருவாக்கும். ஆசிரியர்களும் கற்பிப்பதற்கு நிழல்களைப் பயன்படுத்தலாம். ஆகவே சூழலைப் பாதுகாக்கும்பொருட்டு மரங்களை நடும்போது பல வகையான மனிதத் தேவைகளை அடிப்படையாகக் கருத்திற் கொள்ளுதல் பயனளிக்கும்.

## யுத்த காலத்து உயிர்கள்

யுத்தம் என்று ஒன்று வந்துவிட்டால் உயிர்களும், உடமைகளும் மதிப்பிழந்து போகின்றன. ஹிட்லர் காலத்தில் நடந்த யுத்தத்தில் ஏற்பட்ட அழிவுகளைக் கவனித்தால் உண்மை விளங்கும். சில விபரங்களைக் கீழே படியுங்கள்.

— கொல்லப்பட்ட ராணுவப் படையினர் ஒருகோடியே 71 லட்சத்து 20 ஆயிரம்.

— சித்திரவதை முகாமில் கொல்லப்பட்டவர்கள் 60 லட்சம் மக்கள்.

— கூட்டம் கூட்டமாகச் சுட்டுக்கொல்லப்பட்ட குடிமக்கள் 41 லட்சத்து 88 ஆயிரம் பேர்.

— அழிக்கப்பட்ட சோவியத் நகரங்கள் 1700.

— அழிக்கப்பட்ட கிராமங்கள் 70 ஆயிரம்.

— அழிக்கப்பட்ட தொழிற்சாலைகள் 32 ஆயிரம்.

— அழிக்கப்பட்ட பாடசாலைகள் 1 லட்சத்து 27 ஆயிரம்.

யுத்தம் நடக்கும் நாட்டில் இவைகள் நடப்பது சர்வசாதாரணம்.

# தேனாட்டுக் கவிகளிலே செழுமை கொஞ்சும் அணிச்சுவைகள்

"திமிலைத்துமிலன்"

இயற்கையோடு இணைந்த வாழ்க்கை தித்திக்கும் கிராமியக் கவிகளின் பிறப்பிடம். அந்தக் கவிகளின் ஜனனத்துக்குக் கவித்துவம் அவசியமல்ல. உணர்ச்சியே அடிநாதம். கற்றுவல்ல புலவர்களிடம் காணமுடியாத இலகுவான இனிய அணி நயங்களை அங்கு கண்டு சுவைக்கலாம்.

இதோ ஒரு காட்சி.

வாய்க்கால் ஓரத்திலே நின்றிருக்கிறான் அவன். வெற்றுக் குடத்தை இடுப்பிலே சுமந்து ஒயிலாக நடந்து வந்தஅவள் சட்டென நின்றுவிடுகிறாள்.

''என்ன இவர்; ஏன் இன்று வாய்க்காலுக்கு வரவேணும்? வழக்கம்போல பூவலடிக்கு வந்தால் என்னவாம்? நெஞ்சினுள்ளே வினாக்கள் ஒன்றையொன்று முந்துகின்றன. அவன் அன்று பூவலுக்கு வியர்க்க விறுவிறுக்கத் தண்ணீருக்குத் தவித்த காட்சி 'வீடியோ' வாக நினைவுத்திரையில் விரிகிறது:

அந்தப் பூவலிலே நீர் அள்ளிக்கொண்டு நிமிர்கிறாள் அவள். அவன் எங்கிருந்தோ மூச்சுவாங்க ஓடிவந்திருக்கிறான். 'தண்ணி, தண்ணி, தண்ணி' என்று கேட்க அவனால் முடியவில்லை. அவள் புரிந்துகொள்கிறாள். குனிந்த தலை நிமிராமலே 'தண்ணி' தருகிறாள். விடாயடங்கக் குடித்து முடிந்ததும் நிமிர்ந்து பார்க்கிறான். அம்மாடீ; எத்தனை திருப்தி. தண்ணீர் குடித்ததாலா? அவள் எளிமையான இளமை அழகை வைத்தகண் வாங்காமல் குடித்ததாலும்தான். நாணி நிலம் நோக்கிய அவள் நளின விழிகள்தாம் சும்மா இருந்தனவா? அந்தக் கட்டிளங் காளையைக் கள்ளமாகக் கண்டு கண்டு களிப்புற்றனவே.

பூவலடியிலே ஆரம்பித்த இந்தப் புதுநாடகம் நாள்தோறும் நிகழ்ந்து பழம்பாடமாகியது. அவனோடு நல்லாகப் பழகிவிட்டாள் அவள். ஒருநாள், அவள் பவள இதழ்கள் குறுநகை பூத்து மலர்கின்றன. குரல் கொஞ்சுகிறது; நாணம் இழைகின்றது.

''ஒவ்வொ நாளும் தண்ணித் தவிப்புத்தானா?'' அவன் வாயால் பேசவில்லை. கண்ணால் பதில்சொல்கிறான்.

''ஒவ்வொரு நாளும் உன்னைப் பார்க்கவேணுமென்ற தாகம் உன்னுல... உன்னுல... அவன் எச்சிலை விழுங்குகிறான். அவள் நாணம் படர முறுவலிக்கிறாள்.

''ஏன் என்னில?''... குரலில் தேன் பாய்கிறது. அவனுக்கு வார்த்தைகள் பிறக்கவில்லை. கவிதைதான் பிறக்கிறது.

''ஒன்றுக்கு மில்லைப் பெண்ணார்
உன்னை விரும்பினது – உன்ட
சஞ்சி சடைக்கும்
சரிஞ்சுவிழும் தேமலுக்கும்''

கருங்குழல் காளையரைக் கட்டியிழுப்பது உண்மைதான். ஆனால் இங்கு அவனைக் கவர்ந்துவிட்டிருந்தது அது மாத்திரமல்ல. அவளிடமுள்ள ஏதோ ஒன்றும்தான். அதை, இத்தனைநாளும் அவன் பார்த்துப் பார்த்து ரசித்ததை, அவள் கவனித்தாளோ இல்லையோ; அவன் அதைத்தான் விழுங்கினான். அதற்கு அழுத்தம் கொடுக்கிறான்.

''புத்தம்புதுச் சட்டியிலே
பொன்னுருக்கி வார்த்ததுபோல் – உன்ட
பொன்னான மேனியிலே
போட்டதுகா நற்தேமல்...''

புத்தம்புதுச் சட்டியிலே பொன்னை உருக்கி வார்த்தால் எப்படியிருக்கும்? எத்தனை இயற்கையான, பொருத்த மான உவமை! புத்தம்புதுச் சட்டி புது மெருகோடு கண்ணைக்கவரும், செம்மையோடு மிளிரும். ஒரு கறையோ கறுப்போ அங்கிராது. அதுபோன்ற சிவந்த மேனி அவளுக்கு. அது பொன் மேனி அவனுக்கு. பொன் என்பது அழகு. பொன் என்பது பொலிவு. பொன் என்பது பெறுமதி; பொன் என் பது கண்ணுள் வைத்துக் காப்பாற்ற வேண்டியது. இத்தனை பொருளும் பொதிய 'பொன்னான மேனி' என் கிறான். அதிலே, போட்டதுகா நற் றேமல். 'நற்றேமல்' – இங்கே 'நலம்' என்பதும் அழகு என்ற கருத்தையுடை யது. இங்கே அவளின் முழுமையான அழகுக்கு அழகுசெய்யும் தேமல் அவ னைக் கவர்ந்தது. அந்தத் தேமலுக்கு அழகூட்டும் வகையில் அவன் எடுத் தாண்ட ''புத்தம்புதுச் சட்டியிலே பொன்னுருக்கி வார்த்ததுபோல்'' என்ற உவமை அணியின் அழகு கண்டு நாம் வியக்கிறோம் – சுவைக்கிறோம்.

அன்று, – முதல்நாள் கண்டதி லிருந்து, அவன் தாகத்தோடு ஒவ் வொரு நாளும் வந்துகொண்டிருக் கிறானே; இதற்கு என்ன காரணம்? அவள் கொள்ளை அழகை – குறுகுறு பார்வையை–இளமைப் பூரிப்பை மறக்க முடியாமை மட்டுமல்ல. புத்தம்புதுச் சட்டியிலே பொன்னுருக்கி வார்த்து வைத்திருக்கும் அந்த வனப்பை மறக்க முடியாதமைதான். அவன் விழுங்கி விழுங்கி இன்னும் மிஞ்சி வழிகிறதே தேமல் அழகு! அதை மறக்கமுடியுமா?

''தேமல் அழகி பொண்ணார்
திருநீற்றுப் பொட்டழகி
மார்பழகி வள்ளிப்பிள்ளை –
உன்னை
மறக்கமனம் கொள்ளுதில்லே!''

என்கிறான். தலைக்குமேல் ஏறிவிட்ட புளகம் அவளுக்கு. இத்தனை புகழ்ந் தால், எந்தப் பெண்தான் மயங்கமாட் டாள்? அவள் அவனில் கிறங்கிவிடு கிறாள்.

இவ்வாறு அவளைக் கிறங்கவைத்த அவன் இன்று ஏன் வாய்க்காலடியில் நிற்கவேண்டும்? அந்த நீரை அள்ளிக் குடிக்கவா?... அவள் துணுக்குறுகிறாள். 'கடவுளே!'

அடுத்த ஊரின் அப்படி ஒரு வாய்க் கால் இருக்கிறதாம். அதை அவன் நினைக்க மறுத்தாலும் அது முன்னுக்கு முன்னுக்கு வந்து நிற்கிறதே. அந்த வாய்க்கால் யாரிடமோ தன் அவலத் தைக் கூறி அழுததாம். அந்த வார்த் தைகள் அடக்க அடக்க அவள் நெஞ்சி னுள்ளே ஊறுகின்றன.

''போட்டா வரம்பில்
புறாநடந்து போறதுபோல்
நாட்டாருக் கெல்லாம்
நடைவரம்போ என்னுடலம்?''

''போட்டா வரம்பில் புறாநடந்து போறதுபோல்'' என்ற உவமை கண்டு நாம் அதன் பொருத்தம் உணர்ந்து வியக்கிறோம். ஆனால் அந்த வார்த் தைகள் அவளுக்கு வேதனை தருகின் றன. மார்பு விம்மிப் புடைக்கிறது. 'முருகா, இப்படி ஒரு சோதனையா?' என நொந்தவளாக, அவனைப் பார்க் காமலே பூவலை நோக்கி நடக்கிறாள்.

''பார்ப்போம், என்ன நடக்கிற தென்று பார்ப்போம்''... அவன்மீது அவ ளுக்கும் கோபம். அதனால் இந்த நடை. பராமுக நடை.

பூவலடிக்கு வந்துவிட்டாள். அவ னைப் பார்க்கக்கூடாதென்ற ஒருவகை 'விறுமம்'. ஆனால் பார்க்காமல் இருக்க முடியவில்லை. 'இன்னும் அவன் வாய்க் காலடியிலேதான் நிற்கிறானா?'... தன்னை அறியாமலே திரும்பிப்பார்க் கிறாள்.

வருகிறான்.

அவன் தன்னை நோக்கி வருவது கண்டு உள்ளத்தில் ஒரு நெகிழ்ச்சி. ஆனாலும்; ''வரட்டும், இன்று பேசு வதேயில்லை'' என்ற ஒரு இட்டுமை. குடத்தை இறக்கிவைத்துப் பேசாமல் அள்ளியள்ளி நிப்புகிறாள். குடம்

நிரம்பி வழிகிறது; அவள் உள்ளம் அவனுக்காகப் பொங்கி வழிவதுபோல.

இதைப்பார்த்துச் சிரித்தவன்,

''வழிகிறது, வழிகிறது!''...

என்கிறான். ''என்ன வாய்க்காலா வழிகிறது?'' என்பதுபோல அவளது குறுகுறு பார்வை அவனைக் குத்துகிறது. ''ஏனிந்தக் கோபம்?''... என்பதுபோல அவனது கண்கள் இறைஞ்சுகின்றன.

அவள் இறுமாப்பைக் காட்டுகிறாள். விரைவாகக் குடத்தைத் தூக்கி இடுப்பிலே வைத்தவள் விறுவிறுவென்று நடக்கிறாள். அவன் பாய்ந்தோடி வழி மறிக்கிறான். இரு கைகளையும் அகல விரித்தவனாக, ''விடமாட்டேன். தண்ணி, தண்ணி'' என்கிறான். அவள் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை. தலை குனிந்தபடி சிலையாக நிற்கிறாள்.

நீண்டநேர நிசப்தம்.

இரண்டு சிலைகள் நிலைபெயராமல்... இன்னும் பொறுக்கலாற்றாதவனாக அவள் நாடியைப் பூப்போலத் தொட்டு நிமிர்த்துகிறான். கண்ணீர் வெள்ளம்! கரைபுரண்டு பாய்ந்து மார்பை நனைக்கிறது.

''வள்ளி!...'' தளதளத்துத் ததும்பிய அவன் குரல் அவளது கண்ணீரை நிறுத்தப் போதுமே. அவளே கண்ணீரைத் துடைத்துக்கொண்டவளாக நடக்க முற்படுகிறாள்.

''தண்ணி...'' அவன் கெஞ்சுகிறான்.

அவள் சிரிக்கிறாள். அவனது அப்பழுக்கற்ற புனிதத்துவத்தை அவள் புரிந்துகொண்டதன் பிரதிபலிப்பு அது.

''தண்ணி...'' மீண்டும் அவனின் தவிர்ப்பு.

''ம்கூம், தரமாட்டேன்''... அவளது தலையசைப்பு இப்படிச் சொல்கிறது.

''ஏன்?,,... அவன் கேட்கிறான்;

'களுக்' என்ற சிரிப்பொலியைத் தொடர்ந்து அவள் இதழ்கள் மலர்கின்றன. ஆனால் முகமலர் நிலம் பார்க்கிறது. அவன் காதுகளைக் கூர்மையாக்கிக்கொண்டு கானாமிர்தம் பருகுகிறான்... காதுகளில் தேன்வந்து பாய்கிறது.

''வாய்க்காலில் தண்ணியிலே
வண்டுவிழும் தும்பிவிழும்
பூவலுக்கு வாங்க மச்சான்
புதியதண்ணி நான்தருவேன்''

அவள் போய்விட்டாள்.

''பூவலில் தண்ணியள்ளிக்கொண்டு தானே வீட்டுக்குப் போகிறாள்?''... இதைத்தானா அவன் புரிந்துகொண்டான்? இல்லை. இன்னும் ஏதோ ஒன்றை அவன் புரிந்துகொண்டவனாக இன்னும் சிலையாக நின்றிருக்கிறான்.

நீங்களும் அதைப்புரிந்துகொண்டு— உணர்ந்துகொண்டு... புல்லரிக்கிறதா? இல்லையா?

பதில் தாருங்கள், புரிந்துகொள்வீர்கள்.

வாய்க்கால் தண்ணி எது?
அதை ஏன் பருகக்கூடாது?
பூவல் எது?
புதிய தண்ணி எது?...
இப்போது புரிகிறதா?
இதுதான் உள்ளுறை உவமம்.
உள்ளத்தால் உணரக்கூடியது.

சங்ககாலப் பாக்களில் காணக்கிடக்கும் இந்த அணியை மட்டுமல்ல, இறைச்சிப் பொருளைக்கூட, தேனாட்டுக் கவிகளில் கண்டு சுவைக்கலாம். கிராமியத்துள் நுழைந்து பாருங்கள். கிளர்ச்சி கொள்ளலாம்.

நவநாகரீகமான புடவை வகைகள்,

சேட்டிங், சூட்டிங்,


சாரி வகைகள்

புதிய டிசைன்களில்

நியாய விலையில்

எம்மிடம் கிடைக்கும்.

விஜயம் செய்யுங்கள்



# ஹில்மியாஸ்

இல. 8, மெயின் வீதி,

மட்டக்களப்பு.

தொலைபேசி: 065 - 2825.

இலக்கியத் தரம்வாய்ந்த நூல்கள்,

நாவல், கவிதை, கட்டுரைத் தொகுப்புகள்,

பாடசாலைப் பாவிப்புக்கான புத்தகம், கொப்பி

மற்றும் உபகரணங்கள்,

பரிசளிக்கும் பொருட்கள், காகிதாதிகள்

நியாய விலையில் எம்மிடம் கிடைக்கும்.

# ராஜாஸ் புக் சென்டர்

## RAJAH'S BOOK CENTRE

No. 111, MAIN STREET,
BATTICALOA.

*இல. 111, மெயின் வீதி,*
மட்டக்களப்பு.

# கப்பல் போக்குவரத்திற்கு உகந்த இடம் மட்டக்களப்பு



ரீ. பாக்கியநாயகம்.

இரண்டரை லட்சம் மைல்களுக்கு அப்பாலுள்ள சந்திரனுக்குக்கூட யாத்திரை செய்து திரும்பும் காலமிது. கடந்த பத்து ஆண்டு காலத்துக்குள் போக்குவரத்தைப் பொறுத்தமட்டில் உலகம் அசுர வேகத்தில் முன்னேறியுள்ளது.

மேலைத்தேசங்களிலும், ஜப்பான் போன்ற நாடுகளிலும் ரயில் மணிக்கு முன்னூறு மைல்கள் வேகத்தில் ஓடுகின்றதெனவும், சுப்பர்சோனிக் ஜெட் விமானங்கள் ஒலியின் வேகத்தையும் மிஞ்சிவிட்டன என்பதையும் பார்க்கும் வேளையில், நாம் வாயு வேகத்துக்கும், மனோ வேகத்துக்கும் அதிகமாகவே ஓடிக்கொண்டிருக்கிறோமென்பதை உணரமுடிகிறது.

இந்தத் துரித மாற்றங்கள் நமது நாட்டிலும் பிரதிபலித்துள்ளன. இன்று விமான மார்க்கமாகக் கொழும்பிலிருந்து மட்டக்களப்பை முக்கால் மணி நேரத்திலும், யாழ்ப்பாணத்தை ஒரு மணி நேரத்திலும் அடைந்துவிடலாம். ஆனால், எண்பத்துமூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இதே பயணங்கள் ஏழு நாட்களுக்கும் அதிகமாக எடுத்தன வென்பதை அறியும்போது உண்மையில் ஆச்சரியமடைகிறோம்.

அந்நாட்களில் கடல் மார்க்கமாகச் செய்யப்படும் பிரயாணங்கள் தரை மார்க்கமாக மேற்கொள்ளப்படுபவையிலும் பார்க்கத் துரிதமாயிருந்தன. 1888ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 29ம் திகதி சரியாக நூற்றியாறு ஆண்டுகளுக்கு முன்னர், இலங்கை அரசாங்கம் முதன்முதலாகத் தீவைச் சுற்றிலும் ஒரு கடற் கப்பற் சேவையை ஆரம்பித்துவைத்தது.

கொழும்பிலிருந்து புறப்படும் கப்பல்கள் காலி, அம்பாந்தோட்டை, கல்குடா, திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் தங்கி மீண்டும் கொழும்பு திரும்பின. தாங்கள் அக்காலத்தில் இக்கப்பல்களில் மேற்கொண்ட பிரயாண அனுபவங்களை, எம்மிடையே இன்றும் வாழ்ந்துவரும் முதியவர்கள் நமக்கு எடுத்துக் கூறும்போது அவை எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன.

இவ்வாறான கடற் கப்பல் போக்குவரத்துச் சேவைக்கு முதன் முதலாக இலங்கையில் உபயோகிக்கப்பட்ட கப்பல் இங்கிலாந்திலிருந்து கொண்டுவரப்பட்ட ''லேடி கோர்டன்'' என்னும் கப்பலாகும். இதைத்தொடர்ந்து 300

**மட்டக்களப்பின் அமைப்பானது கப்பல் போக்குவரத்திற்கு மிகவும் உகந்தது. முன்பெல்லாம் கப்பல் போக்குவரத்து இருந்ததென்பதை விளக்குகிறார் இக்கட்டுரையாளர்.**

தொன் எடையுள்ள இன்னும் பல கப்பல்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டன. கார், ரயில், விமான சேவைகள் இல்லாதிருந்த அந்தக்காலத்தில் கப்பல் சேவை மிகவும் பிரபல்யமாயிருந்தது.

சேவைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்களின் தொகை அதிகரிக்கவே அவற்றுடன் சேர்ந்து கடல் விபத்துக்களும் எண்ணிக்கையில் அதிகமாயின. முதன் முதலாக 1888ம் ஆண்டு சேவைக்கு விடப்பட்ட ''லேடி கோர்டன்'' ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் மட்டக்களப்புக்கருகே கடலில் ஒரு பாறையில் மோதி விபத்துக்குள்ளாகியது. ஆனால் இலங்கையின் கடற் சரித்திரத்திலேயே ஏற்பட்ட பெரும் விபத்து ''லேடி மக்கலம்'' என்னும் கப்பலுககுக் கல்குடாவில் ஏற்பட்டதேயாகும்.

''லேடி மக்கலம்'' 1925ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ம் திகதி கொழும்பிலிருந்து புறப்பட்டது. அதுவே அக்கப்பலின் இறுதி யாத்திரை என்பதை அந்நேரம் அக்கப்பலிற் சென்ற பிரயாணிகள் உணரவில்லை. புதுவருடத் தினக் கொண்டாட்டத்தைக் குதூகலமாகக் கடலிலே கொண்டாடுவதற்கும், தமது கிறிஸ்மஸ்-புத்தாண்டு விடுமுறையைக் கடல் யாத்திரை செய்வதில் பயன்படுத்துமுகமாகவும் பலர் அக்கப்பலில் சென்றனர்.

1926ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி இரவு கப்பல் கல்குடாத் துறைமுகத்தை விட்டுத் திருகோணமலைநோக்கிப் புறப்பட்டது. கப்பலின் மேல்தளத்திலிருந்து பிரயாணிகள் ஆடிப் பாடிப் புதுவருட தினத்தைக் கொண்டாடிக்கொண்டிருந்தார்கள்.

திடீரென்று ஓர் அதிர்ச்சி கல்பலை ஓர் உலுக்கு உலுக்கியது. ஆம், ''லேடி மக்கலம்'' ஒரு பெரிய கற்பாறையில் மோதுண்டது. சம்பவம் நடைபெற்று அரைமணி நேரத்திற்குள் அந்த 316 தொன் கப்பல் கடலிலே முற்றாக அமிழ்ந்தியது. கப்பலிலிருந்த உயிர்காக்கும் படகுகள் மூலமாகப் பலர் காப்பாற்றப்பட்டனர்.

ஆனால் அறுவர் கடலுக்குப் பலியானார்களென அரசாங்க அறிக்கை கூறியது. படகுகளிலே ஏறிய பிரயாணிகள் அன்றிரவு முழுவதையும் காரிருளில் கடலிலேயே கழித்தனர். பின்னிரவு வேளாயில் நிலவு தோன்றிய போதுதான் அவர்கள் ஒருவரையொருவர் அடையாளம் காணமுடிந்தது.

''லேடி மக்கலம்'' கப்பல் விபத்தைத் தொடர்ந்து இற்றைவரை சுமார் முப்பதுக்கும் அதிகமான விபத்துக்கள் கடற் பயணத்தில் ஏற்பட்டன. 1942ம் ஆண்டு இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது ஜப்பானிய வெடிகுண்டு விமானங்கள் இலங்கையின் கிழக்குக் கரையருகே சென்றுகொண்டிருந்த பல நேசநாட்டுக் கப்பல்களுக்குக் குண்டுவீசி கடலுக்கடியில் அவைகளை அனுப்பின.

இவற்றையெல்லாம் கவனிக்கும் போது அந்தக் காலத்தில் ஆபத்து நிறைந்த இத்தகைய கடற் பிரயாணங்களை நம் முன்னோர் மேற்கொண்ட சம்பவங்கள் மெய்சிலிக்கச் செய்கின்றன அல்லவா?

# கலை இலக்கியத்தின் உருவமும் உள்ளடக்கமும்

க. யோகநாதன், B. A. (Hons.)

இலக்கியம் பற்றிய சர்ச்சைகளில் அதன் உருவம் உள்ளடக்கம் தொடர்பான கருத்துப் பரிமாறல்கள் நீண்ட காலமாக இலக்கிய உலகில் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. இது ஓர் முடிவிலாத் தர்க்கமாகவே இன்றுவரை இருக்கின்றது எனலாம்.

எவ்வாறாயினும் ஓர் இலக்கியப் படைப்பின் உருவம் இது, உள்ளடக்கம் இது என இரட்டாசத் தெட்டத் தெளிவாக வரையறை செய்வது இயலாத காரியம் என்பது உண்மைதான். அதேபொழுதில் இலக்கியத்தில் உருவம் உள்ளடக்கம் என்ற இரண்டு பிரமாணங்கள் இருக்கின்றன என்பதும் பிரத்தியட்சமான உண்மை.

இவ்விடத்தில் இலக்கியத்தில் உருவம் அல்லது கலையம்சம் அல்லது அழகியல் என்ற கோட்பாட்டை முதன்மைப்படுத்தி இலக்கியத்தின் உள்ளடக்கத்தைப் பின்தள்ளிக் கருத்துக்கள் கூறுவோரின் வாதங்களின் சமூக வேர்களையும், அதன் குறைபாடுகளையும் மட்டும் இக்கட்டுரையில் குறித்துக்காட்ட முயல்கின்றேன்.

இலக்கியத்தில் உருவத்தை முதன்மை செய்யும் உருவவாதமும், உருவத்தைப் புறம் தள்ளும் உள்ளடக்க வாதமும் தம்மளவில் ஒரு முனை வாதம் ஆகி உண்மைக்குப் புறம்பாகிப் போய்விடும் நிலையை உண்மையான கலா இரசிகன் எவனும் ஏற்றுக்கொள்ளான் என்ற எடுகோளின் அடிப்படையிலேயே இக்கட்டுரையை அமைக்கின்றேன். என்றாலும் இன்றைய உலக இலக்கியச் சூழலில் இலக்கியத்தின் உள்ளடக்கவாதத்தின் தவறுகளை விட உருவவாதத்தின் தவறுகள் நயவஞ்சகத் தன்மை கொண்டவை. மனித நியாயங்களுக்கு எதிரான சதிச் செயல்கள் என்பதில் எனக்குத் திடமான நம்பிக்கை உண்டு. இவ்வாறு நான் கூறும்பொழுது ''வெறுமையான உள்ளடக்கவாதத்தின்'' வக்கிலாக என்னை நான் இருத்திக்கொள்ளவில்லை என்பதையும் கூறிக்கொள்ள விளைகின்றேன்.

எவையுமே காலதேச வர்த்தமான பரிமாணங்களைக் கொண்டவை. வாழ்வியல் சார்ந்த எவையும் இதற்கு விதிவிலக்கல்ல. எனவே கலைத்துறைக்கும் இது பொருந்தும்.

உலக இலக்கியப் பரப்பில் இலக்கியத்தின் சமூகப் பெறுமானம் அதன் செய்தி வெளிப்பாடு தொடர்பான கருத்துக்கள் நவீன யுகத்தின் தோற்றத்தோடேயே சர்ச்சைக்குரிய ஒன்றாக உருப்பெறத் தொடங்குகின்றன எனலாம். இந்த வகையில் ஆதியில் உருவவாதம் அல்லது கலைவாதம் என்பது அதிகார வர்க்கத்திற்கு ஏதோ ஒரு வகையில் எதிர்க்குரல்களாகவே வெளிப்பட்டன. அதேபொழுதில் உள்ளடக்கவாதம் அல்லது சமூகவாதம் அதிகார வகைப்பட்ட பிரகிருதிகளின் கோட்பாடாகவே வெளிவந்தது.

பிரான்சின் புத்தார்த்தவாதியான தியோபில் கோர்த்தியா, இயற்பண்பு

வாதியான ஃபிளோபர், இரஷ்யாவின் புஷ்கின் போன்றோர் தம் காலத்து அதிகார வர்க்கத்தாருடன் ஒத்து ஒட மறுத்தனர். ஆட்சியாளர்களுக்கு இசைவாக இயங்க இலக்கியத்தில் மறுத்தனர். இதனால் அவர்கள் கலைவாதத்தை அல்லது உருவவாதத்தைச் சரண் அடைந்தனர். அன்றைய நிலையில் இலக்கியத்தின் உள்ளடக்கத்தை முதன்மை செய்தல் அல்லது இலக்கியத்தின் சமூகப் பொறுப்பினை உறுதி செய்தல் என்பது ஆளும் வர்க்கத்திற்கு வக்காளத்து வாங்கும் ஒரு செயலாகவே கருதப்பட்டது. இந்த நிலையில் ஆளும் வர்க்கம் முதன்மை செய்த சமூகவாதம் அல்லது உள்ளடக்கச் சீர்மை என்கின்ற கோட்பாடுகளை நிராகரித்து கலைவாதம் அல்லது உருவவாதத்தினை தியோபில் கோர்த்தியா, ஃபிளோபர், புஷ்கின் போன்றோர் எடுத்தியம்பினர். இதன்மூலம் ஆளும் வர்க்கத்தாரோடு, அவர்தம் அசிங்கங்களோடு ஒத்துஓட மறுத்த தம் உணர்வுகளை வெளிப்படுத்தினர். இந்த வரலாற்று உண்மையின் அடிப்படையில் நோக்கும்பொழுது ஆதிக் கலைவாதம் அல்லது உருவவாதம் என்பது ஆளும் வர்க்கத்தோடு முழுமையாக ஒத்துப் போகாத் தன்மையையும், சமூகவாதம் அல்லது உள்ளடக்கவாதம் ஆளும் வர்க்கச் சார்புகொண்டதாகவும் இருந்துள்ளது எனலாம்.

உலகின் தொன்மை வரலாற்று மரபுடைய மொழியினரின் செந்நெறி இலக்கிய மரபை நோக்கும்பொழுது இந்த உண்மையை நாம் தெளிவாகக் கண்டுகொள்ளமுடியும். உதாரணத்திற்குத் தமிழ் இலக்கிய உலகை நாம் சான்றாகக் கொள்ளமுடியும்.

சங்க காலத்தின் ஆளும் வர்க்கமாகிய மன்னர்கள் போரின் மூலம் தமது நலன்களைப் பெருக்கிக்கொள்ள முயன்றனர். இதற்கு அக்கால செந்நெறிப்புலவர்களும் நியாயம் கற்பித்து ஆளும் மன்னர்களின் போர்ச் செயலை ஆதரித்து நின்றனர். சங்க இலக்கியப் புறப்பாடல்கள் இதற்குத் தக்க சான்று. ஒருசில பாடல்கள் இதற்கு விலலாக இருக்கலாம். எப்பொழுதும் சமூகத்தின் ஏகபோக போக்கிற்கு எதிரான குரல்கள் சமூகத்தில் இருப்பது இயல்பு. நாம் கவனத்தில் கொள்ளவேண்டியது ஏகபோக போக்கையே ஆகும். உதாரணமாகப் புறநானூற்றுப் பாடல் ஒன்று பின்வருமாறு கூறுகின்றது.

''ஒருவனை ஒருவன்
அடுதலும் தொலைதலும்
புதுவது அன்று
இவ்வுலகத்து இயற்கை''

என அப்பாடல் கூறும். இது அக்கால போரின் வழிப்பட்ட நலன்களைக் கொண்ட ஆளும் வர்க்கச் செயற்பாட்டை நியாயப்படுத்தும் குரல். வரலாற்று நியதி நின்று பார்க்கும்பொழுது இது காலத்தின் குரல் எனக் கூறப்படினும், ஆளும் வர்க்கத்திற்கான குரலும் கூட என்றே கொள்ளுதல் வேண்டும். இவ்வாறான நிலையை இன்றும் நாம் உலகில் ஆங்காங்கு காணமுடியும். அதாவது எங்கு மக்கள் சக்தி கிளர்ந்து எழாது மந்தைகளாய் ஆளும் வர்க்கங்களின் அடியொற்றிச் செயற்படுகின்றனவோ அங்கு ஆளும் வர்க்கம் இலக்கியத்தின் சமூகவாதத்திற்கு அல்லது உள்ளடக்கவாதத்திற்கு அநுசரணையாகவே செல்கின்றன. ஆயின் உலகின் பொதுப்பரப்பை எடுத்து நோக்கும்பொழுது இன்று நிலமை வேறாகவே உள்ளது.

உழைக்கும் மக்கள் சிறப்பாகத் தொழிலாளர் வர்க்கம் எழுச்சிபெற்று முதலாளித்துவ வர்க்கங்களுக்குப் பகையான, பலமான அரசியற் சக்திகளாய் உருமாறிய நிலையில் உலகின் பிற்போக்கு ஆளும் வர்க்கங்கள் தாங்கள் முதன்மைப்படுத்திய சமூகவாதம் அல்லது உள்ளடக்கவாதம் என்பதற்கு எதிராகத் திரும்பி உள்ளன. இன்று அவை மக்களை ஏமாற்றும் வாணிப கலாச்

சாரத்தையும் மறுபுறத்தில் உருவவாத அழகியல்வாத கலாச்சாரத்தையுமே ஆதரிக்கின்றன அல்லது மறைமுகமாக ஊக்குவிக்கின்றன. இன்று சமூகவாதம் அல்லது உள்ளடக்கவாதம் என்பவை அவர்களுடைய ஆளும் வர்க்க நலன்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்பதை அவர்கள் விளங்கிக்கொண்டுள்ளனர். வரலாற்றின் வளர்ச்சி இந்த நிலைக்கு அவர்களைக் கொண்டுவந்து நிறுத்தியுள்ளது. இதனாலேயே அவர்கள் சமூகத்தின் பாமரத்தனமான பொது ஜனங்களை வாணிப கலாச்சாரத்தாலும் உன்னிப்பான சிந்தனை வட்டத்தினரை அழகியல்வாதக் கலாச்சாரத்தாலும், திசை திருப்பி இலக்கியத்தின் சமூகவாதம் அல்லது உள்ளடக்கக் கருத்தூன்றல்களின்பால் மக்கள் சென்றுவிடாது பார்த்துக்கொள்கின்றனர். ஆகவே கலைவாதம் அல்லது உருவவாதம் என்பது அவற்றின் ஆரம்ப காலங்களில் கிளர்ச்சித் தன்மை கொண்டு இருந்தாலும் இன்று அவை ஆளும் வர்க்கத்தின் நலன் நாடும் சங்கதிகள் ஆகிவிட்டன எனலாம்.

இத்தகையதொரு வரலாற்றுப் பின்னணியிலேயே கலைவாதம் அல்லது உருவவாதத்தை அனுகவேண்டியவர்களாக உள்ளோம். இந்த வரலாற்றுப் பின்னணியை விளங்கிக்கொள்ளாதவர்களும், தீய சக்திகளுமே இன்று அழகியல் வாதத்தின் பக்கம் நின்று இலக்கியத்தின் உள்ளடக்கத்திற்கு உரிய பெறுமானத்தையும் அதன் பரிமாணத்தையும் மறுப்பவர்கள் ஆகி உள்ளனர்.

ஐரோப்பாவில் முதலாளித்துவம் நன்கு வளர்ச்சி அடைந்த நிலையிலேயே கலைவாதம் அல்லது உருவவாதம் அல்லது அழகியல்வாதம் அங்கு ஆளும் வர்க்கத்திற்குச் சேவைசெய்யும் கலைத்துறை கருத்தியலாக மாறியுள்ளது. இங்கிருந்தே வளர்முக நாடுகள், அல்லது மூன்றாம் மண்டல நாடுகளின் புத்தி ஜீவிகளுக்கு இந்தக் கருத்தியல் வினியோகம் செய்யப்படுகின்றது.

மூன்றாம் மண்டல நாடுகளில் பொதுவாகக் காணப்படும் ஒரு பண்பு தான் மேலைநாடுகள் சமூக வளர்ச்சியில் தம்மை முந்திச் சென்றுவிட்டன என்ற கருத்து. தாமும் அத்தகயதொரு அபிவிருத்தியைப் பெறல்வேண்டும் என்பது இதன் பலனாய் இந்த நாடுகளில் காணப்படும் அபிலாசை. தமது அபிவிருத்திற்கு மேலைநாடுகள் ஊறு செய்கின்றன என்ற அதிருப்தி மேலை நாடுகள்மீது மூன்றாம் மண்டல நாடுகளுக்கு இருக்கும் அதேவேளையில் அவர்கள் பெற்று இருக்கும் அபிவிருத்தி மட்டத்தைத் தாமும் பெற்றுவிடுவதே தமது ஈடேற்றத்தின் இலக்கு எனும் எதிர்பார்க்கை மூன்றாம் மண்டல நாடுகளில் காணப்படும் பண்பாகும். அதாவது தம்மிலும் மேலானவர்களாக மேலைத்தேயத்தாரைக் கருதும் நிலை இன்று மூன்றாம் மண்டல நாடுகளில் காணப்படும் சிந்தனை ஓட்டம். இதனால் எடுத்ததெற்கெல்லாம் அங்கு இருந்தே முன்னுதாரணங்களைப் பெற்றுக்கொள்ள முயலும் போக்கை மூன்றாம் மண்டல நாடுகளில் நாம் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது. இந்தச் சிந்தனைப் போக்கிற்கு மூன்றாம் மண்டல நாடுகளின் கலைத்துறையும் விதிவிலக்காகிவிடவில்லை.

மேலைத்தேய முதலாளித்துவ சக்திகள் தமது சுரண்டல் போக்காலும், வாழ்வாலும் இன்று தன் நாட்டு மக்களையும், உலக மக்களையும் கண்டு அஞ்சுகின்றனர். எனவே சமூகத்தின் சகல துறைகளிலும் இருந்து தமக்கு எதிரான விளைவுகள் வரா வண்ணம் காரியங்களைத் திட்டமிட்டு ஆற்றுகின்றனர். இதில் ஒன்றே அவர்கள் தமக்கு எதிராகக் கிளம்பிய கலைவாதம் அல்லது உருவவாதத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைந்து நிற்பதாகும்.

இவ்வாறு முதலாளித்துவ சக்திகள் தமக்குச் சாதகமாகக் கலைவாதத்தை அல்லது உருவவாதத்தைப் பயன்படுத்த

முடிந்தமை இக்கோட்பாட்டின் உள்ளார்ந்த பலவீனத்தையே காட்டுகின்றது. கலைவாதம் அல்லது உருவவாதம் ஆளும் அதிகார வர்க்கத்தாருக்கு அல்லது முதலாளித்துவ சக்திகளுக்கு எதிரானதாக ஆதியில் வெளிவரினும் இக்கோட்பாட்டின் இவ் எதிர்ப்பு மிகப் பலவீனமானது ஆகும். இந்தப் பலவீனம் அதன் ஆரம்பகாலத்திலேயே காணப்பட்ட ஒன்றாகும். அதாவது இக்கோட்பாடு மக்களுக்கும் எதிரான நிலைப்பாட்டை எடுப்பதற்கான சாத்தியப்பாட்டையும் தன்னுள் கொண்டு இருந்தது. இதனை ஆதிக் கலைவாதிகளின் செயற்பாடுகள் நிருபித்தே நிற்கின்றன. உதாரணமாக ஆதிக் கலைவாதிகளாகிய தியோபில் கோர்த்தியேவ், ஃபிளோபர் முதலானோரிடம் இதனை நாம் காணலாம். இவர்கள் பிரான்சின் தொழிலாளி வர்க்கம் எழுச்சிபெற்றுப் பொது அரங்கில் முதன்மை பெறத் தொடங்கியதும் அவர்களது எழுச்சிக்கும் எதிராகவே தமது கலைவாதக் கோட்பாட்டைப் பயன்படுத்தினர். மேலைத்தேய கலை இலக்கிய வரலாறு கூறும் உண்மை இது.

கலைவாதம் அல்லது உருவவாதத்தின் இப்பலவீனத்தை முதலாளித்துவ சகதிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர். இதேசமயததில் தாம் பயன்படுத்திய சமூகவாதம் அல்லது உள்ளடக்கவாதம் மக்கள் சாரிகளுக்குப் பயன்படும் நிலையையும் அவர்கள் கண்டனர். எனவே அவர்கள் தமக்குச் சாதகமான கலைவாதத்தை அல்லது உருவவாதத்தைப் பல்வகையிலும் வளர்த்தெடுக்க முயன்றனர். அதனைத் தம் நாடுகளிலும், தம் செல்வாக்குக்குள்ளாகிய நாடுகளிலும் பரவும் வகை செய்தனர்.

மூன்றாம் மண்டல நாடுகளில் கலை இலக்கியத் துறையில் பெரிதும் ஆதிக்கம் புரியும் சக்திகள் முதலாளித்துவக் கல்வி பெற்ற மத்திய வகுப்பாரே ஆவர். தமக்குச் சாதகமான இந்த சமூகத் தளத்தினரை பயன்படுத்தியே மூன்றாம் மண்டல நாடுகள் மத்தியில் முதலாளித்துவச் சக்திகள் தம் கலைவாதக் கருத்துக்களைப் பரப்பினர், பரப்பி வருகின்றனர். ஏற்கனவே கூறியதுபோல் எதற்கும் மேற்கை அண்ணாந்து பார்க்கும் மூன்றாம் மண்டல நாடுகளின் சமூகச் சூழ்நிலை இதற்கு வாய்ப்பாகிவிட்டது.

இன்று முதலாளித்துவ சக்திகள் கலைவாதத்தை அதன் பழைய வடிவத்தில் அவ்வாறே பயன்படுத்துகின்றனர் எனக் கூறமுடியாது. மயக்கம் தரும் பல புதிய உத்தி முறைகளை அவர்கள் கையாள்கின்றனர். இன்றய நிலையில் கலைவாதம் அல்லது உருவவாதம் என்பதை நாம் அழகியல் வாதம் எனக் கூறுதல் தகும்.

கலை இலக்கியம் சார்ந்த தமது அழகியல்வாதக் கருத்துக்களைக் கலை இயக்கியம் சார்ந்த ஒரேயொரு கருத்தியல் என்ற பிரமையை முதலாளித்துவ சக்திகள் ஏற்படுத்தி உள்ளனர். ஒருபுறத்தில் வாணிப சீரழிவுக் கலாச்சாரத்தைப் பரப்பும் அதே முதலாளித்துவ சக்திகள்தான் மறுபுறத்தில் அழகியல்வாதக் கலாச்சாரத்தையும் வளர்க்கின்றனர். பொதுச் சந்தைக்கான உற்பத்தி, சிறப்புச் சந்தைக்கான உற்பத்தி என்ற தமது பொருளாதரர உற்பத்தி உத்தி முறையையே அவர்கள் கலை இலக்கிய உலகிலும் பிரயோகிக்கின்றனர். பொதுச் சந்தைக்கு வாணிபக் கலாச்சாரத்தையும், சிறப்புச் சந்தைக்கு அழகியல்வாதக் கலாச்சாரத்தையும் உரித்தாக்கி அவர்கள் வளர்க்கின்றனர்.

இன்றைய நிலையில் கலை கலைக்காக என்ற வாதத்தை முதலாளித்துவ சக்திகள் பயன்படுத்துவதைப் பெருமளவு குறைத்துக்கொண்டுள்ளனர். ''உருவச் செம்மை'' என உரக்கக் கூவிக்கொண்டே கலை இலக்கியத் துறையில் அவர்கள் தம் இலக்குகளை அடைய முயல்கின்றனர்.

# மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை

நடாத்தும்

# முத்தமிழ் விழா

இடம்: மட் / இந்துக்கல்லூரி.

## நிகழ்ச்சி விபரம்

### 25-04-94 காலை 9-30 மணி

1. மங்கல வாத்திய இசையுடன் பிரதம விருந்தினர் அழைத்துவரப்படுதல்.
2. மங்கல விளக்கேற்றல்.
3. தமிழ்மொழி வாழ்த்து.
4. வரவேற்புரை — திருமதி வாசுகி அருள்ராஜா (உதவி பிரதேச செயலாளர்)
5. தலைமை உரை — திருமதி கலாமதி பாலசிங்கம் (உதவி பிரதேச செயலாளர்)
6. கவி அரங்கு — ''சமாதானமாக.........''

   தலைமை — கவிஞர் மட்டுநகர் முத்தழகு.

   கலந்துகொள்ளும் கவிஞர்கள்:

   த. மலர்ச்செல்வன், மூதூர் ஜெயராஜ், ஜவ்ஹர்கான்.
7. அல்குர்ஆன் மகிமை — தயாரிப்பு: திருமதி ஹபீபா காதர்.
8. பட்டிமன்றம் — பெண்நிலை வாதம் தமிழர் பண்பாட்டிற்குப் பொருந்தும் / பொருந்தாது.

   நடுவர் : திருமதி அம்மன்கிளி முருகதாஸ்.

   பொருந்தும் என வாதிடுவோர்:

   திரு. பாலசுகுமார், திருமதி சுகந்தி ராசனாயகம், E. அற்புதராசா குருஸ்.

   பொருந்தாது என வாதிடுவோர்:

   திருமதி சுபா சக்கரவர்த்தி, திருமதி இந்திராணி புஷ்பராஜா, திருமதி வள்ளி சோமசுந்தரம்.

### 25-04-94 பிற்பகல் 3-00 மணி

1. தலைமை உரை:

   செல்வி கலாமதி பாலசிங்கம் (உதவி பிரதேச செயலாளர்)
2. முத்தமிழ் விழா சிறப்புமலர் வெளியீடு:
   - ★ வெளியீட்டுரை — எஸ். தங்கவேல் (திமிலை மகாலிங்கம்)
   - ★ பேரவைத் தலைவரிடமிருந்து பிரதம விருந்தினர் மாண்புமிகு லயனல் பெர்னாண்டோ அவர்கள் பிரதியைப் பெற்றுக்கொள்ளுதல்.

★ பிரமுகர்கள் சிறப்புப்பிரதி பெறுதல்:

செழியன். ஜே. பேரின்பநாயகம் (மட் / மாநகரசபை முதல்வர்)
திரு. கே. தங்கவேல் (இந்துக்கல்லூரி அதிபர்)
திரு. ஹரிசன் றொசைறோ (முகாமையாளர், இலங்கை வங்கி)
திரு. கணபதிப்பிள்ளை (காகித ஆலை)
திரு. துரைசிங்கம் (உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்)
திரு. டேவிட் (கணக்காளர், பிரதேச செயலகம்)
செல்வி தங்கேஸ்வரி கதிராமன் (கலாசார அலுவலர்)
திரு. மனோகரதாஸ் (பணிப்பாளர், நீர்ப்பாசன இலாகா)
திரு. க. தருமலிங்கம் (கி. சே. அலுவலர், புளியந்தீவு)

3. கலைஞர்கள் கௌரவிக்கப்படுதல்.

கௌரவம் பெறும் கலைஞர்கள் :

மட்டுநகர் முத்தழகு (கவிஞர்),
டாக்டர் எஸ். வேலாயுதபிள்ளை (ஓவியர்),
திரு. க. சரவணபவன் (ஓவியர்),
திரு. த. கனகையா (அண்ணாவியார்),
திரு. த. சிவஞானமூர்த்தி (அண்ணாவியார்)

4. சிறப்பு விருந்தினர் உரை:
திரு. அ. இ, பத்மநாதன் அவர்கள் (வட-கிழக்கு மாகாணசபை)

5. பிரதம விருந்தினர் உரை:
மாண்புமிகு லயனல் பெர்ணாண்டோ அவர்கள்
(ஆளுனர், வடகிழக்கு மாகாணசபை)

6. பரிசு வழங்குதல் :

★ நாட்டுக்கூத்துப் போட்டியில் முதலிடம் பெற்ற
''தாட்சாயினி கல்யாணம்''
தயாரிப்பாளர்: திரு. த. கனகையா.

★ நாட்டுக்கூத்துப் போட்டியில் இரண்டாவது இடம்பெற்ற
''தாவீது கோலியாத்''
இருதயநாதர் சனசமூக நிலையம்.

7. நடனம் : நிர்த்தியாஞ்சலி.
தயாரிப்பு: பரதகலார்ப்பணா நாட்டிய நிலைய மாணவிகள்.

8. நகைச்சுவை : மாஸ்டர் சிவலிங்கம்.

9. பாட்டு : இசைக்கலா பூஷணம், சங்கீத பூஷணம்
திருமதி சாந்தாவதி நாகையா (சேவைக்கால சங்கீத ஆலோசகர்)
பக்கவாத்தியங்கள்:
வயலின் : செல்வி சரஸ்வதி சிவசுப்பிரமணியம்.
மிருதங்கம்: திரு. வே. சிறிதரன்.

10. நாட்டுக்கூத்து : தாட்சாயினி கல்யாணம்
தயாரிப்பு: த. கனகையா அண்ணாவியார்.

11. நாடகம் : "பப்பியா ? பறவாதியா ?"
(மண்முனை வடக்கு பிரதேச செயலக
கிராமசேவை அலுவலர் குழு)

12. நன்றியுரை : திரு. இருதயநாதன்.

மீன் பாடும் தேன் நாட்டு மக்களுக்கோர் வரப்பிரசாதம்.

அதுதான்

# சிறுபுடவைக் கைத்தொழில் விற்பனை நிலையம்

★ கைத்தொழிற் கிராமம், விசித்திர நெசவு நிலையம், கைத்தொழிற்பேட்டை ஆகிய உள்ளூர் உற்பத்தி நிலையங்களால் உருவாக்கப்பட்ட புடவை வகைகள்.

★ கைத்தறிச் சேலைகள், சாரம், படுக்கை விரிப்பு, துவாய், தலையணை உறை, கைக்குட்டை, ஜமுக்காளம், பாடசாலைப் பை, வேட்டி, சால்வை, மேசை விரிப்பு, சேட்டிங், காரிக்கன் துணி, ஆஸ்பத்திரித் துணி,

மற்றும்

★ சிறு கைத்தொழிற் பொருட்களான:
தலையணை, மெத்தை, கால்தட்டி, இடியப்பத்தட்டு, கூடைகள், மட்பாண்டப் பொருட்கள், தும்புத்தடி, ஈர்க்கில்தடி, அரச அலுவலகப் பொருட்கள்.

இவைமட்டுமல்ல,

★ அலுவலகத்துக்கான தளபாடச் சாமான்கள் மின் இயந்திர தச்சுப் பயிற்சிப் பாடசாலையில் செய்து கொடுக்கப்படும்.

இன்றே விஜயம்செய்து பயனடையுங்கள்.

# சிறுபுடவைக் கைத்தொழில் விற்பனை நிலையம்

(பெற்றோல் நிரப்பும் நிலையத்திற்கு எதிரே)

**பார் வீதி : : மட்டக்களப்பு.**

தொலைபேசி: 065 - 2754.



சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

Composed by S. Singarajah.